RECEIVED
23-12-1986
PERIODICALS DIVISION
UNIVERSITY

விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 மார்கழி 8 ர. ஆகிர் 20 இதழ் 312

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-12-1986

## தமிழ் போராளிகள் மோதலுக்கு உட்பூசலே காரணம் - எம் ஜி ஆர் கருத்து

(சென்னை)

"இலங்கை தமிழ்ப்போராளிக்குழுக்களுக்கிடையே நில வும் கருத்து வேறுபாடுகளும், உட்பூசல்களுமே அவர்களுக்கிடையிலான மோதலுக்கு காரணமாகும்" என்று தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் கருத்து வெளியிட்டுள்ளதாக இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி மீது நடத்தப்பட்ட தாக்குதலானது தமிழக முதல்வரின் அனுசரணையுடனேயே நடத்தப்பட்டதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவர்

(5ம் பக்கம் பார்க்க)

## பாண்டியன்குளத்தில் ரயில் பாலம் குண்டுவைத்து தகர்ப்பு!

(வவனியா நிருபர்)

வவனியா யாழ்ப்பாண வீதியில் பாண்டியன்குளம் அருகே ரெயில்பாலமொன்று கடந்த ஞாயிறு இரவு இனந்தெரியாதோரினால் குண்டு வைத்துத்

(5ம் பக்கம் பார்க்க)

# புதிய ஆண்டில் காங்கேசன்துறைமுகத்தில் புதிய இறங்குதுறை!

## இராணுவ நடவடிக்கை தீவிரமாகும் அறிகுறி

(நமது விஷேட நிருபர்)

**புதிய ஆண்டில் (1987) காங்கேசன்துறை துறைமுகத்தில் புதிய இறங்கு துறை அமைக்கப்படவுள்ளது. இப்புதிய இறங்குதுறை, வடக்கில் இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கைகளின் முக்கிய அம்சமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

தற்போது பாவிப்பிலுள்ள இறங்குதுறை, இராணுவ மற்றும் சிவில் சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த வருட ஆரம்பம் முதல் இந்த இறங்குதுறை அடிக்கடி பெரும்பாலும் இராணுவ உபயோகத்துக்கே பயன்படுத்தப்பட்டுவருகின்றது.

வாரத்தில் பல தடவைகள் இராணுவத்தினருக்கான பொருட்களைத் தெற்கிலிருந்து வரும் சரக்குக் கப்பல்களும், கடற்படைக் கப்பல்களும் இத் துறைமுகத்தில் இறக்கிவருகின்றன

இத்துடன் வடக்கின் கரையோரப் பகுதிகளை அண்டிய இராணுவ முகாம்களுக்கும் தெற்கிலிருந்து கொண்டுவரப்படும் பண்டங்கள் காங்கேசன்துறைத் துறைமுகப்பகுதியிலிருந்தே விநியோகிக்கப்பட்டு வருகின்றன

புதிய துருப்பினரும் அனேகமாக விமான மார்க்கமாகவே வடக்குக் கொண்டு வரப்படுகின்றனர்.

ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள் அடங்கியதாகத் தெரிவிக்கப்படும் கொள்கலன்களும் தற்போது பாவிப்பிலுள்ள துறைமுக இறங்குதுறையிலேயே இறக்கப்பட்டுவருகின்றன.

இதேவேளை வடபகுதிக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்களும் கப்பல் மார்க்கமாக இத்துறைமுகத்திலேயே இறக்கப்பட்டுவருகின்றது.

(5-ம் பக்கம்பார்க்க)

## வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத காரணங்களினால் கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களிலும் 'ஈழநாடு' பத்திரிகையை வெளியிடமுடியவில்லையென்பதை அறியத்தருகின்றோம்.

இதனால் வாசகர்கள், விளம்பரதாரர்கள், அபிமானிகளுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகின்றோம்.

நிர்வாகி
"ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.

## புலிகளால் சேதமாக்கப்பட்ட ஹெலிகாப்டர் விமானப்படை தளத்தில் திருத்தப்படுகிறது

வவனியா, திங்கள்

கடந்த வியாழன் மாலை பூவரசன்குளத்தில் புலிகளுடைய தாக்குதலுக்குள்ளாகிப் பலத்த சேதமடைந்த ஹெலிகாப்டர் தற்போது வவனியா விமானப்படைத் தளத்தில் வைத்துத் திருத்தப்பட்டு வருகின்றது.

இராணுவ ஹெலிகாப்டரான இது புலிகளுடைய தாக்குதலினால் சேதமடைந்து. கீழேவிழ்ந்த இதன் சில பாகங்கள் பொதுமக்களுடைய பார்வைக்காகப் பூவரசன்குளத்தில் வைக்கப்பட்டிருந்தது

இதேவேளை இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் குடிபெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS

★ Norway ★ Germany
★ France ★ Canada

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

### பலாலி - தொண்டமனாறு வீதியில்

## 100 பேர் கொண்ட இராணுவ அணிமீது புலிகள் கனன்சார்ஜ்

யாழ்ப்பாணம், செவ்

பலாலிக்கும் - தொண்டமனாறுக்குமிடையே நீர்ப்பெட்டி என்னுமிடத்தில் இராணுவ அணி ஒன்றின்மீது கடுந்தாக்குதல் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் நேற்றுமாலை 4 மணியளவில் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் நான்கு வாகனங்களிலும், கால்நடையாகவும் சென்ற சுமார் 100 பேர் கொண்ட இராணுவ அணியொன்று சிதறடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

இந்த இராணுவ அணி பலாலியிலிருந்து தொண்டமானாறுக்கு நகர்ந்துகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற நீர்பபெட்டி என்னும் இடத்தில் மேற்படி இராணுவ அணிமீது 'கனன் சார்ஜ்' தாக்குதல் முறையே மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலையடுத்து மேற்படி இராணுவ அணி திக்குத்

(5ம் பக்கம் பார்க்க)

### ஹற்றனில் முஸ்லிம்

## கார்ச்சாரதி கடத்தப்பட்டு சுட்டுக் கொலை!

(நுவரேலியா நிருபர்)

ஹட்டன் நகரில் கடந்த வெள்ளி இரவு ஆயுதம்தாங்கிய இனந்தெரியாதசிலர் தனியார் கார்ச்சாரதி ஒருவரை சுட்டுக்கொலை செய்துள்ளனர்

தனியார் கார்ச்சாரதியான நிலாத்தீனிடம் கடந்த வெள்ளி இரவு சென்றசிலர் குறிக்கப்பட்ட இடமொன்றுக்கு போகவேண்டுமெனக் கூறி அவரதுகாரை வடகைக்கு அமர்த்திச் சென்றனர்.

கார் சிலமைல்கள் சென்றதும் கார்ச்சாரதியான நிலாத்தீன் (28 வயது) காருக்கு வெளியே இழுக்கப்பட்டு நெற்றியில் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

(5-ம் பக்கம் பார்க்க)

### கோட்டைக்கு வெளியே வந்த

## இராணுவம்மீது புலிகள் தாக்குதல்; ஹெலி பின்வாங்கியது

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ் கோட்டையிலிருந்து நேற்று நண்பகல் இராணுவத்தினர் நகருக்குள் வரமுயற்சித்தபோது போராளிகள் எதிர்த்தாக்குதல் நடத்தியதால் திருப்பிச் சென்றனர்

இதனைத்தொடர்ந்து ஹெலிகாப்டர் தாக்குதலும் தொடர்சியாக பத்துநிமிடம்வரை நடைபெற்றது. போராளிகள் ஹெலியை நோக்கி சுட்டபோது ஹெலி மேலெழுந்து பின்வாங்கியது.

நகரை வட்டமிட்டு தொடர்ச்சியாக ஹெலியிலிருந்து சுடப்பட்டபோது [illegible] பட்டன. மினிபஸ்கள் டாக்ஸிகள், ஆரியகுளம் சந்திக்கு சென்றது

பண்ணைப்பகுதியிலுள்ள

(5ம் பக்கம் பார்க்க)

### யாழ் பல்கலைக்கழகத்துக்கு

## பேராசிரியர் விஜேசேகரா நூல்கள் அன்பளிப்பு

புலோலி, திங்கள்

முன்னாள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும், பேராதனைப் பல்கலைக்கழக சமஸ்கிருதப் பேராசிரியருமான ஓ. எச். த. விஜேசேகர தனது சொந்த சேகரிப்புகளான இந்து தத்துவம், வேதங்கள், சமஸ்கிருதம் தொடர்பான அரியநூல்கள் பலவற்றை யாழ்ப்பாணப் பல்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள் (Broi'er) விருத்துக் குஞ்சுகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அண்ணா பாம், இணுவில், செம்மாதெரு, யாழ்ப்பாணம். A-3362

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001. [C6299]

மெய்கண்டான் லீலா கலண்டர்கள், டயறிகள் போதிய கையிருப்பிலுண்டு கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள் மொத்த வியாபாரிகள் வியாபார ஸ்தாபனத்துக்கு அன்பளிப்பாக வழங்கக்கூடிய விலாசம் அடிக்கப்படாத கலண்டர்களுமுண்டு. மக்மிலன் புத்தகசாலை, 03, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C 6365)

சகல விதமான றேடியோ உதிரிப்பாகங்கள், ரெலிவிசன் துணைப்பாகங்கள் விற்பனைக்குண்டு. திருத்துனர்களுக்கு விசேட கழிவுண்டு நியூ சிற்றி றேடர்ஸ், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், போன்: 24055 [A3307]

சகலவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்டு நியாயவிலையில் விற்பனை செய்யப்படுகின்றன. மற்றைய நிறுவனங்களிலும் பார்க்க வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு, தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும் லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் 644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் முன்). C 6434

தரமான நவீன வீட்டுத் தளபாடங்கள், T.V, டெக், Pyrex கிளாஸ் வகைகள், Singer Zig Zag தையல் மெஷின், Formica மேசை, Fans, சற் றேடியோக்கள், Electric Or-Fan, அமெரிக்கன் Pyrex Dinner Sets Tea Sets. Brass lamps, Fridge, கட்டில்மெத்தைகள், விருந்தை கதிரைகள், கண்ணாடி மேசைகள், Show case, பெரிய சிறிய அலுமாரிகள், Meat safe, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், St Patrics வீதியருகில் C 6441

## சேவை

135 M. M. கலர் பிலிம் சுருள்கள் எதுவானாலும் Processing and Printing செய்பவர்களுக்கு போஸ்காட் சைஸ் ரூபா 4-75. Proce sing only 20/- விபரங்களுக்கு கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். A-3357

உங்களிடமுள்ள பாவித்த வீட்டுப்பாவனைப் பொருட்களையும், தளபாடங்களையும் விற்கவோ, மாற்றுதல் செய்யவோ புதுப்பிக்கவோ தொடர்பு கொள்ளவும்: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். St. Patrics வீதி வருகில். C 6442

மணமகன் மணமகள் தேவைகளுக்கும் எப்பொருள்களானாலும் ஆதனங்களுட்பட வாங்கவும் விற்கவும். திட்டப்பரிசு விபரங்களுக்கும், எம்மை நாடுங்கள். புதியனவும் பழையனவுமாகும் நானாவித பொருள்கள் ஆதனங்களுட்பட மலிவு விற்பனைக்கிருக்கின்றன. லக்கி பெனிபிட் கோ லிமிட்டட், சந்திக்கருகாமையில் கோப்பாய். C 6394

## தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல வியாபார நிறுவனத்திற்கு. விற்பனையாளர் (Sales Clerk) தேவை. முன் அனுபவத்துடன் 25-40 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல A-3367, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். A-3367

கடையில் வேலைசெய்யக் கூடிய சிற்றூழியர்கள் உடனடியாகத்தேவை. யாழ். நகரிலிருந்து மூன்றுமைல் சுற்றுடலுக்குள் வசிப்பவராக இருக்கவேண்டும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: நியூரோன் எலக்ரிக்கல்ஸ், 141, 143, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (C 3366

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல வியாபார நிலையத்திற்கு, களஞ்சியப்பொறுப்பாளர் [Store Keeper] தேவை. ஆங்கிலம் எழுத, வாசிக்கத் தெரிந்தவராகவும், முன்வேலை செய்த அனுபவமுள்ளவராகவும். பிணை ... கட்டக் கூடியவராகவும் இருத்தல்வேண்டும். விளம்பர இல. A-3368 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் A-3368

## வகுப்புக்கள்

Spoken English புதிய பிரிவுகள். திங்கள், புதன், வெள்ளி காலை 6மணி—7மணி 9மணி 10மணி ஆரம்பம்: 29-12 86 S B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். C-6483

### சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## வரவு-செலவுத் திட்டம்—1987

(255-ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின், 1979-ம் ஆண்டின் 13-ம இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3)-ம் பிரிவி பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட 1987-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டம் தற்பொழுது இவ்வலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரங்களில் இதனைப் பார்வையிடலாமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
(தலைவருக்காக)

நகராட்சிமன்ற
அலுவலகம்,
சாவகச்சேரி.

(A3364)

### வலி-கிழக்கு தெ. ம. ப நோ. கூ. சங்கம்.

## ஏல விற்பனை

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள் ஏலவிற்பனை மூலம் விற்பனைக்கிருக்கின்றன. பொருட்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 27-12-86-ம் திகதி சனிக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு சங்கத் தலைமைக்கந்தோரில் சமுகமளித்து பெற்றுக்கொள்ளலாம், பொருட்களின் விபரம்:-

சுவீப்பிங் சீனி.
சுவீப்பிங் மாவு;
தெத்தலித்தூள்
கவ்பீ, கோழித்தீன்;
குடைவகைகள்
மற்றும் ஏனைய பொருட்கள்.

பொதுமுகாமையாளர்
நீர்வேலி.
[A 3358]

## பரிசளிப்பும் பாராட்டு விழாவும்

சுழிபுரம். திங்கள்

சுழிபுரம்கிழக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலை பரிசளிப்பு விழாவும் இளைப்பாறிய இரு ஆசிரியர்களின் சேவை நலம் பாராட்டு வைபவமும் பாடசாலை அதிபர் திரு. சு செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



விகடர் இராசையா செல்வராஜா
(முன்னாள் தேசிய உபுக் கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர்]

தோற்றம்:-
13-07-1926
மறைவு:
23-12-1983

காலங்கள் கடந்திடினும் எம் கண்ணீர் வற்றவில்லை.

மனைவி, மக்கள், குடும்பத்தினர்.
'மணிக்கொட்',
பருத்தித்துறை
(C 6480)

## ஓராண்டு நினைவஞ்சலி



நடராசா ஜெயக்குமாரி

பிறப்பு -
1967-4-5
உதிர்வு:
1985-12-31

அன்பின ஜெயாவே! உனைப் பிரிந்த நாள் முதல் எம்முதிரம் கொதிக்கிறது. உனக்கொரு முடிவு நீ எடுப்பாய்! அம்முடிவே மரணத்திலும் நீ எடுத்தாய்! உன் பிரிவால உன் குடும்பம் விடிவிழந்து நிற்குதம்மா! உன்னைப் பிரிந்து ஆண்டொன்று ஆனாலும் அணுவேனும் உன்நினைவு அழிபவில்லை அன்பே என்றும் நீ எம் முன் வாழ்வாய்! உன் பிரிவால் சிறகொடிந்த பறவையாய் தவிக்கின்றோம்! இறைவா உன் ஜோதியில் என்றும் அணைப்பாய்.

பிரிவால் வாடும்:
இனிய குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.
(C 6481)

### வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி.

## விளம்பரம்

மேற்படி சங்கத்தில் அரிசி ஆலை அமைப்பதற்கு கீழ்காட்டப்பட்ட இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. வைத்திருப்பவர்கள் உடனடியாக சங்கத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகொள்ளும்போது விலைவிபரங்களை குறிப்பிடவேண்டும்.

பொலிசர் இல 1 (சைனா)
அலர் இல. 2 (கொம்பிளீட்) சைனா
25 H P. மோட்டர் 2.
10 H. P. மோட்டர்.
3 H P. மோட்டர்.
2 H P. மோட்டர் (சிலோ ஸ்பீற் 1)
5 H P. மோட்டர்
200 ஏ. எம். மெயின் சுவிச் 1 ஸ்ராட்டரும், மெயின் சுவிச்சும்
உமி அடுப்பு.
செப்ரடடர்.
இல இல. 1
கல்லு அரிக்கும் சில்ரர்.
டயற் வாளி (Fan

பொது முகாமையாளர்
A-3360

### பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், பூநகரி.

## வெற்றுச் சாக்கு கேள்வி கோரல்

கீழ்க்காண் விபரப்படியுள்ள வெற்றுச் சாக்குகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெற்றுச் சாக்குகளை பிரதம சங்கத்திற் பார்வையிட்டுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத்திகதி 7-1-87.

| | | |
|---|---|---|
| 1. | நீலக்கோடன் 3 குறி சாக்கு | 500 |
| 2 | மாவுச்சாக்கு 55 கிலோ தரம்-1 | 400 |
| 3. | மாவுச் சாக்கு தரம் 2 | 300 |
| 4 | பீ எம். பீ. சாக்கு 68 கிலோ | 375 |
| 5. | சைனா அரிசி சாக்கு 50 கிலோ | 625 |
| 6. | சீனிச்சாக்கு 50 கிலோ | 100 |
| 7. | கழிவு சாக்கு தரம் 1 | 200 |
| 8. | கழிவு சாக்கு தரம் 2 | 175 |
| | | 2675 |

இங்ஙனம்
பொது முகாமையாளர்
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
A-3365 பூநகரி.

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



திரு சு சிவராசா
இறைவன் படைப்பு:
09-01-1941
அகால மறைவு:-
23-12-1984

லிப்ரன்ஸ் (Lipton's Ltd) ஸ்தாபனத்தில் விற்பனைப் பிரதிநிதியாகப் பலஇடங்களில் தொழில் பார்த்து, நீர்கொழும்பில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது 1981ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தில் உயிர்தப்பி, தொழில் வீடுஎல்லாம் விட்டுவிட்டுப் பிறந்த மண்ணில் உங்கள் குடும்பத்துடன் வாழலாமென்றோடிவந்தீர்கள்; 1982ம் ஆண்டில் யாழ் ஐக்கிய வியாபார சங்கத்தில் முகாமையாளராகக் கடமையேற்று, அத்தாபனத்தின் தொழிலதிபர், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்று ஸ்தாபனத்தை வளர்த்து நீங்களும் உயர்ந்தீர்கள். உங்கள் அயரா உழைப்பாலும் உயர்ந்தபண்பாலும் பிறர்மனதைக் கவர்ந்ததுடன் எங்களையும் அன்போடும் பாசத்தோடும் வழிநடத்தி, அன்புக்கணவராயும், பாசமான தந்தையாயும் எமதுகுடும்பத்தின் ஒளிவிளக்காய்நல்லாசானாய் இருந்து எமதுள்ளங்களிற் குடிகொண்ட தெய்வமே!



செல்வன்
சி. நிமலன்

இறைவன் படைப்பு:
26-05-1974
அகால மறைவு;
23-12-1984

எங்கள் குடும்பத்தின் கலைமகனாய் உதித்த, பண்பு, பணிவு, பக்தியோடுவாழ்ந்து பெற்றோர் உற்றோரை மகிழ்வித்து எமதுள்ளங்களிற் குடியிருக்கும் தெய்வமே! நிமலா நீர் யா/யாழ் இந்து ஆரம்பபாடசாலையின் மாணவமணியாய், கல்வி கலை, விளையாட்டு அனைத்திலும் திறமைகாட்டி ஆசிரியர் மாணவர் உள்ளங்களில் இடம்பெற்றீர். சென்பீற்ரேஸ் ஆங்கில பாடசாலையில் (St Peters School of English) திறமையான மாணவனைத் தெரிந்து சோதனையாளர் நடாத்திய பரீட்சையிலேயே அதிகூடிய புள்ளிபெற்று விசேடபரிசுடன் முதலிடமும்பெற்றீர். மிகச்சின்ன வயதில் குடும்பத்தின் நன்மகனாய் சமூகத்தில் நற்பிரசையாய் மிகவேகமாக வளர்ந்தது உலகைவிட்டு மிகவேகமாகப் போனதற்கோ நிமலா! எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் மகிழ்ச்சியின் இருப்பிடமாய் திகழ்ந்த தெய்வமே நீர் துள்ளித்திரிந்த வீடும் கூடிவிளையாடிய இடமும் சுற்றமும் சுற்றுப்பிட்ட கோயிலும்வெறிச்சோடிக் கிடக்குதே;

ஆண்டிரண்டானாலும் நீங்கள் குடியிருந்தஉள்ளங்கள் உமது நினைவாலும் உங்களைப்பார்த்த கண்கள் நீராலும் நிறைந்திருக்கின்றன. உங்களுக்காக உங்கள் ஆத்மசாந்திக்காக எமது அன்றாட பிரார்த்தனையில் இறைவன் பாதங்களை மலர்களினால் அர்ச்சிக்கும்:
உங்கள் குடும்பத்தினர்;

இல: 8, பொன்னைப்பா லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(C-6469)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ் ஈழப்போர் தோல்வியுறுமானால்———

# உலகிலுள்ள 8 கோடி தமிழருக்கும் விமோசனம் ஏற்படமாட்டாது

(லண்டனிலிருந்து குகநாதன்)

தமிழ்ஈழப் போராட்டம் தோல்வியடையுமானால் உலகிலுள்ள எட்டுக்கோடித் தமிழர்களுக்கும் விமோசனம் ஏற்படப்போவதில்லை என்று தமிழக காந்தி காமராஜ் தலைவர் திரு பி. நெடுமாறன் கவலை தெரிவித்தார்.

லண்டனில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்ட மொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரித்தானியக் கிளையினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இப்பொதுக்கூட்டத்தில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கலந்துகொண்டனர்.

ஈழம் சென்றிருந்தபோது தான் நேரில் கண்ட சோகக் கதைகளை அழுதழுதவாறு விபரித்த அவர், தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது.

ஈழப்போராட்டத்தில் இலங்கை அரசை எந்தவிதத்திலும் சந்தித்தயாராகிக் கொண்டிருக்கிறோம்

''ஈழப் போராளிகளை வீட்டுக்காவலில் வைத்ததன் மூலம் அவமானப்பட்டது இந்திய அரசுதான். இந்தியாவின் சர்வதேசக் கொள்கை வகுப்பவர்கள் இப்போது இதனால் குழம்பிப்போய் இருக்கிறார்கள்.

பெங்களூரில் சார்க் மாநாடு நடைபெற்றது. தென்னாசிய நாடுகளின் ஒற்றுமை மாநாடு இது. இந்த மாநாட்டில் ஏழு நாடுகள் கலந்துகொண்டன இந்த மாநாட்டுக்கு பிரபாகரனை ஏன் அழைத்தார்கள் தெரியுமா? 'சார்க்' குழுவில் இப்போது எட்டாவது நாடாக தமிழ்ஈழத்தை அங்கீகரித்திருக்கிறார்கள்.

''ஜெயவர்த்தனா தனது எந்த முயற்சியில் வெற்றி பெறாவிட்டாலும் ஒரு முயற்சியில் வென்றுவிட்டார் அதாவது இப்போ தமிழீழத்தில் ஒரு தலைமுறை கல்வி அறிவு இல்லாதவர்களாகவே வளர்ந்துவருகிறது.

''பிரிட்டனிலும் ஐரோப்பிய நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் பூரண நிதியுதவி அளித்தால் ஆறு மாதத்தில் தமிழீழம் கிடைத்துவிடும் இந்தியா உடன் ஈழத்தை அங்கீகரிக்கும்''.

— நெடுமாறன்

## வல்வை இளைஞர் மர்மமாக லண்டனில் மரணம்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தஷ்யந்தன் என்ற இளைஞர் லண்டனில் மர்மமான முறையில் அறையினுள் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

வல்வையைச்சேர்ந்த அரியரட்ணம் தம்பதிகளின் புதல்வரான தஷ்யந்தன் (வயது 23) லண்டன் 'வெஸ்ற்ஹாமில்' கம்பியூட்டர் பட்டப்படிப்புக்காக அங்கு தங்கி படித்து வந்தார்.

உறவினர் வீட்டுக்குச் செல்வதாக தனது இலங்கை நண்பரிடம் கூறிவிட்டுச் சென்றவரது அறை ஐந்து ஆறு தினங்களாகியும் பூட்டியே கிடந்தது என்றும், உறவினர் வீட்டிற்கும் இந்த நாட்களில் இவர் போகாததால் இவரைப் பற்றி விசாரித்ததில் ஐந்து ஆறு தினங்களாக இவரது அறை பூட்டியே கிடப்பதாகவும் அறிந்த சக நண்பர்கள் ஐயம்கொண்டு இவரது அறையைத் திறந்து பார்த்தபொழுது இவர் அறையில் இறந்துகிடக்கக் காணப்பட்டார் என்றும் இவரது உடல் இங்கு அனுப்பிவைக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் அங்கிருந்து இங்குள்ள இவரது பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆறு மாதகாலத்தின் முன்னரும் இவர் தமது சுயீனம் காரணமாக தனது அறையில் மயங்கிக் கிடந்ததைக் கண்டு உடனடியாகச் சிகிச்சையளிக்கப்பட்டபின் குணமடைந்தார் எனவும் இவரது பெற்றோர் தெரிவித்தனர். (எ)

## இளவாலையில் மருந்தகம் அமைக்க 3 லட்சம் நிதி ஒதுக்கீடு

சுன்னாகம். திங்கள்

இளவாலையில் அரசினர் மருந்தகம் ஒன்று நிறுவுவதற்கு மூன்று லட்சம் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இளவாலை பொருளாதார கலை கலாசார வளர்ச்சிக் கழகத்தினர் இதுதொடர்பாக சுகாதார அமைச்சு யாழ் அபிவிருத்திசபை ஆகியவற்றிற்கு விடுத்த கோரிக்கையை அடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது

இதுவரைகாலமும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்ற விளான், இளவாலை மாரீசன்கூடல், சேந்தாங்குளம் மக்கள் இதனால் பெரிதும் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

### தமது சொந்த இடங்களில்

## மன்னார் மாவட்ட அகதிகளை மீளக் குடியேற்ற முயற்சி

மன்னார், திங்கள்

மன்னார் மாவட்ட அகதிகளை மீளவும் அவர்கள் இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகள் வெகுவிரைவில் நடைபெறவுள்ளதாக மன்னார் மாவட்ட அகதிகள் பிரச்னை சம்பந்தமாக வடபிராந்திய இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், பொதுசனத்தொடர்பு அதிகாரி திரு மதுரப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

வவனியாவில் கடந்தவாரம் இடம்பெற்ற சமாதானக்குழு கூட்டத்தில் மேற்படி நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டபோது வவனியா மாவட்ட முப்படைத் தளபதி இம்முயற்சிக்கு சகல ஒத்துழைப்பும் வழங்கப்படுமென உறுதளித்ததைத் தொடர்ந்து அகதிகள் மீளக்குடியேற்ற நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது

அக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு நடவடிக்கையில் வங்கிகளில் அடகுவைக்கப்பட்ட நகைகளை அடுத்தவருடம் ஜனவரிமாதம் வவனியாவிற்கு கொண்டுவந்து கொடுக்கவும், நகைச் சொந்தக்காரர் செலுத்தியுள்ள பணத்திற்கு வட்டியும் பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் முப்படைத்தளபதி உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## ஆட்டுக்குளம் கிராமம் தெரிவு

நெல்லியடி, திங்கள்

கிராமஎழுச்சித் திட்டத்தின் கீழ் கரவெட்டி கிழக்கு ஆட்டுக்குளம் என்னும் கிராமம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஒரு மாதிரிக் கிராமமாக அமையவிருக்கும் இப்பகுதியில் பாடசாலை, வைத்தியசாலை, உபதபால் கந்தோர் மாதர் சங்கம் ஆகியன இடம் பெறவுள்ளன.

இக்கிராமத்துக்கென நீர்ப்பாசனத்திட்டம், மின்விநியோகம் போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன இதில் குடியிருப்பாளருக்கென 74 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதுசம்பந்தமான பூர்வாங்க மதிப்பீடுகள் முடிந்ததும் 1987 தை மாதம் வேலைகள் ஆரம்பிக்கவுள்ளனர்

(எ)

## சவுதியில் மரணம்

ஊர்காவற்றுறை, திங்

சவுதியில் வேலைபார்த்து வந்த இலங்கை பெண்மணி ஒருவர் இலங்கை திரும்புவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த வேளையில் கார் விபத்தில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார்

இதுபற்றித் தெரியவருவதாவது: ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இவரது கணவர் சவுதி செல்வதற்கு ஏஜென்சி ஒன்றுக்கு பணம் கட்டியிருந்தார் பின் ஏஜென்ஜியால் ஏமாற்றப்பட்டதோடு, கடன் சுமையும் கூடிவிட்டது. இதை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பெண்மணி சவூதிக்குச் சென்று, சில வருடங்கள் தொழில்புரிந்தார்.

வீட்டுக்கு தேவையான பொருட்கள் வாங்கி மீண்டும் இலங்கைக்கு வருவதற்கேற்ற ஆயத்தங்கள் செய்தார். நண்பர்களிடம் தான் வேலைபார்த்த சவுதி குடும்பத்தோடு பிரியாவிடை சொல்வதற்கு செல்லும் வழியில் கார் விபத்தில் சிக்கி இவரும், சவுதி குடும்பமும் மரணத்தை தழுவநேர்ந்தது. (எ)

## சாரதாதேவி குருபூஜை

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமத்தில் இன்று ஸ்ரீசாரதாதேவி ஜயந்தி நடைபெறும்.

காலை பூசையும் பகல் அகதிகளுக்காக நிவாரண நிகழ்ச்சியும் நிகழும். (ப)

### யாழ் மாவட்ட

## வீதி திருத்த வேலைகளுக்கு 75 லட்சம் நிதிஒதுக்கீடு

கொழும்பு, திங்கள்

யாழ். மாவட்டத்திலுள்ள வீதிகளைத் திருத்துவதற்கு அடுத்த வருடம் 75 லட்சம் ரூபா ஒதுக்கப்படவுள்ளது. இவ்வீதித் திருத்தத்திற்கான பணத்தை யாழ். மாவட்ட அமைச்சு ஒதுக்கியுள்ளது.

இதுசம்பந்தமாக யாழ் திட்டமிடல்பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் தகவல் தருகையில், அடுத்தவருடம் யாழ் மாவட்டத்தில் 28 வீதிகள் திருத்தி அமைக்கப்படவுள்ளதாகவும், இவற்றில் சில வீதிகளின் திருத்தவேலைகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி, புலோலி கொடிகாமம் வீதி, கட்டுவன் மல்லாகம் வீதி, வல்லை உடுப்பிட்டி வீதி, புத்தூர், கந்தரோடை வீதி ஆகியனவற்றின் திருத்த வேலைகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

1986ம் ஆண்டு 2 கோடி நூறு லட்சம் ரூபா இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

(வ)

### இராணுவம்-இளைஞர்கள்

## வல்வையில் போட்டிக்கு பட்டம் விடுகின்றனர்!

வல்வெட்டித்துறை, திங்கள்

பலவித பட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிப்போர் வீரன் உருவிலும் பட்டம் பறக்க விடப்படுகிறது அதுவும் வல்வை இராணுவமுகாமுக்கு மிக அண்மையில்

கடந்த சில தினங்களாக வல்வையில் இளைஞர்கள், முதியவர்களால் படலம், பிராந்து, கொக்கு, காக்கை, வெளவால், கட்டுக்கொடி, பாம்புக்கொடி போன்ற பலதரப்பட்ட பட்டங்கள் பறக்க விடுவதைப் பார்த்த, வல்வை முகாம் இராணுவத்தினர் சில பட்டங்களை பறக்க விட்டனர் கடந்த இரண்டு தினங்களாக பெரிய பாம்பு பட்டத்தினை பறக்க விட்டிருக்கின்றனர்.

இப்பட்டத்திற்கு மிக அண்மையில் சுமார் 100 யார் அருகில் புலி இயக்க போராளி உருவில் அமைந்த சுமார் 5 அடி உயரப்பட்டம், இராணுவமுகாம் பக்கமாகத் துப்பாக்கி நீட்டிய விதத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது.

## ஆலயத்தில் திருட்டு

சாவகச்சேரி, திங்

கைதடி நாவற்குளி பகுதியில் இருக்கும் பெரும்படை ஆலயம், மகாவிஷ்ணு ஆலயம் ஆகிய இரண்டிலும் திருடர்கள் கூரையைப் பிரித்து களவாடியுள்ளனர்.

பெரும்படை ஆலயத்தில் மூலஸ்தானத்திலிருந்த கட்டியினையும் உண்டியலில் இருந்த பணத்தினையும் திருடியுள்ளனர்.

இதேபோல மகாவிஷ்ணு ஆலயத்தில் மூலஸ்தான தட்டினை எடுத்து வெளியில் போட்டுவிட்டுச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது. [எ]

## வைத்தியசேவை

சுன்னாகம், திங்

சுன்னாகம் பகுதியை உள்ளடக்கிய சகல ஆரம்ப சுகாதார நிலையங்களினதும் சொறி, சிரங்கு, மற்றும் நோய்களுக்கான வைத்தியசேவை நாளை 24ம் திகதியும் 26ம் திகதியும் நடைபெறும்.

வைத்திய கலாநிதி இ தெய்வேந்திரன் உட்பட சுகாதாரப் பிரிவினர் சிகிச்சையளிப்பார்கள்.

## மக்கள் அச்சம்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவுக் கடலைச்சுற்றி ரோந்துவரும் கப்பலில் இரவு வேளைகளில் வெடிக்கப்படும் குண்டுகளால் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இரவுவேளைகளில் வெடிக்கப்படும் இக்குண்டுகள் தீவையே அதிரவைக்கக்கூடியதாகவுள்ளன.

## நிதியுதவி

நெல்லியடி திங்:

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் செலவு நிதித் திட்டத்தின் கீழ் 10 வறிய குடும்பங்களுக்கு முதல் கட்ட நிதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது, இதில் இரண்டு குடும்பங்கள் தங்களுக்கான வீடுகளைப் பூர்த்தி செய்துள்ளன.

மேலும் இத்திட்டத்தின் கீழ் 7 குடும்பங்களுக்கு இம்மாத முடிவுக்குள் முதல்கட்ட நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

## விவசாயிகளுக்கான ஓய்வூதியத்திட்டம்

கொழும்பு திங்

விவசாயிகளுக்கான ஓய்வூதியத்திட்டம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளது

மேற்படி தகவலை விவசாய ஆராய்ச்சிதுறை அமைச்சர் காமினி ஜயசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

விவசாய ஆராய்ச்சிதுறைக்கான நிதிஒதுக்கீடு குறித்து குழுநிலையில் ஆராயப்பட்டபோது மேலும் பேசிய அமைச்சர் விவசாய துறையில் இலங்கை அடைந்துவரும் துரித முன்னேற்றத்தினால் வருடாந்தம் 320 கோடி ரூபா அந்நிய செலாவணியைப் பெறமுடிகின்றது என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அன்பில்லாத உடலைச் சுடுகாடு என்றே அறி.

— குருநானக்.

## நமது நோக்கு

# மானிட தெய்வங்கள்:

## பரமஹம்சரும் ஸ்ரீசாரதாதேவியாரும்

'அனைத்தையும் துறந்த யோகி, போர்க்களத்தில் போராடி உயிர் துறந்த வீரன் ஆகிய இருவரும் சூரியமண்டலத்தைப் பிளந்துகொண்டு அதே ஆனந்தப் பேரின்பத்தை அடைகின்றனர்'' இவ்வாறு ஒரு சுலோகம் சொல்கிறது.

துறவின் பெருமை இவ்வுலக வாழ்வை துச்சமென மதிப்பதில்தங்கியிருக்கிறது; அதனால் மனித வாழ்வு மகத்துவம் பெறுகிறது. இந்திய தத்துவமேதை ராதாகிருஷ்ணன் அதனைக் குறிப்பிட்ட ஆங்கிலத்தில் ஒரு சொல்லோவியம் "'sages and seers scorn life to keep life above scorn''.

இன்று அன்னை சாரதா தேவியாரினதும், ஸ்ரீராம கிருஷ்ணரினதும் ஜயந்தி விழாவை தக்கமுறையில் கொண்டாடும் கொழும்பு இராமகிருஷ்ண நிலையம் அதன் பிரதமவிருந்தினராக அழைத்த பெரியார் அண்மையில் இந்தியதேசிய ஒருமைப்பாட்டுக்கு வழங்கிய இந்திராகாந்தி விருதை முதன்முதல் பெற்ற பேரருளாளன் - சுவாமி ரங்கநாதானந்தஜீ

பத்திரிகையாளர் இத்தகைய ஞானிகளைப் பேட்டி காண்பது பரிகாசம் போலத்தோன்றும். இராமகிருஷ்ணருக்கும் வேதாந்த கோட்பாட்டுக்கும் தொடர்பு உண்டா? என்றொரு நிருபரின் கேள்வியை சுவாமி கேலிசெய்யவில்லை; அதேசமயம் அதனை இலகுவில்நிருபர் புரிந்துகொள்ளுவாரென்றும் நம்பவில்லை.

வேதாந்தமென்ற பெரும் சமுத்திரம் சைவசித்தாந்தத்தை மட்டுமல்ல கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள் அனைத்தையும் அணைத்துநிற்கும் ஒரு எல்லையற்ற நீர்ப்பரப்பு என்ற வகையில் சுவாமியின் விடை அமைந்தது.

ஸ்ரீசாரதாதேவியார் தமது 19ம் வயதில் தமது கணவர் ஸ்ரீராமகிருஷ்ணரை அடைந்து பெற்ற அனுபவமும் உபதேசமும் இன்று அனைத்துலகத்தின் செல்வம்.

ஒருநாள் சாரதாதேவி ஸ்ரீராமகிருஷ்ணரின் அறையல் அவருடைய கால்களைப் பிடித்துக்கொண்டிருந்த போது "என்னை நீங்கள் எப்படிக் கருதுகிறீர்கள்'' என்று அன்னை கேட்டார்; பரமஹம்சர் சற்றும் தயங்காமல் "இந்தக் கோயிலில் எந்தக் காளி வணங்கப்படுகிறளோ, இந்த உடலை (தயை) ஈன்ற எந்தத் தாய் இப்போது நஹபதில் வாழ்ந்துகொண்டிருக்கிறளோ அவளேதான் நீ; நான் உன்னை எப்போதும் ஆனந்தமயமான காளியாகவே கண்டுவருகிறேன்'' என்றார்.

சாரதா தேவியிடம் வெளிப்பட்டதெய்வீகத்தன்மையைப்பற்றி ராமகிருஷ்ணர்சொல்கிறார்; "திருமணமானபிறகு அன்னை காளியிடம் நான் எனமனைவியின் மனதிலிருந்து உடலின்பத்தைப்பற்றிய எல்லா நினைவுகளையும் களைந்துவிடும்படி பிரார்த்தனை செய்துவந்தேன். என்னுடைய இந்தப் பிரார்த்தனையை அம்பிகை எந்த அளவிற்கு ஏற்றுக்கொண்டாள் என்பதை நான் சாரதாவுடன் வாழ்ந்த இந்த இரவுகளில்கண்டுகொண்டேன்'' என்று கூறியுள்ளார்

இந்நாட்டிலும் இது போன்ற உல்லாசப் பயணிகளைக் கவரும் எந்த நாட்டிலும் காணப்படும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களும் அழகான சந்திர ஒளி வீசும் கடற்கரைகளும் இந்தக் கூற்றை இலகுவில் நம்பப்போவதில்லை வாழ்க்கையில் பிரார்த்தனைக்கிடமுண்டு என்று கொள்ளப்படும் இத்தகைய பிரார்த்தனையில் சுகம்காணமாட்டார் கருச்சிதைவும் குடும்பத்திட்டமும் பிறந்த குழந்தைகள் காசுக்கு விலைப்படுவதும் எங்கள் நாட்டைப் போன்ற நாடுகளில் சிறப்பாகப் பத்திரிகைகள் பறைசாற்றுகின்றன.

இதற்குமாற்று மருந்தாக மனிதவடிவெடுத்தெய்வங்கள் என்று வர்ணிக்கப்படும் ஸ்ரீராமகிருஷ்ணர் - சாரதாதேவி ஜயந்திவிழா இன்றைய நவீன நாகரிகத்தில் மூழ்கியிருக்கும் மனித சமுதாயத்திற்கு ஒருமாற்று மருந்தாக அமையும்.

# இன்று ஜயந்தி:

# தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி



பெரும் நோக்காக வாழ்க்கையைப் பார்க்கும் பொழுது ஒரு அபாரமான சக்தி ஒன்று நம்முடைய செயல், வாழ்வு யாவையும் வழி நடத்திக் கொண்டு போவதை உணர்கிறோம்; இந்த அபாரமான சக்தியைப்பற்றிய செய்திகளை நமக்கு அவதார புருஷர்கள், ஞானிகள், தீர்க்கதரிசிகள் உலகத்தில் தோன்றி நம்மிடையே வாழ்ந்து நமக்கு காலத்துக்காலம் அறிவிக்கிறார்கள்.

இப்படியான அவதார புருஷர்களுள் மிகவும் அமைதியாக வாழ்க்கை வாழ்ந்தவர் அன்னை ஸ்ரீ சாரதா தேவியார். இவர் பொதுமக்களு

என்றும் அதுவும் ஒரு நாளைக்கு உபயோகமாகும் என்றும் வற்புறுத்தினர்

இவர் தம்மிடம் எவ்வளவு பக்தர்கள் வந்தாலும் தானே

அவருடன் சென்றவர்களுக்கும் பரிமாறினர்.

சுவாமி அபேதானந்தர் அன்னையைப்பற்றி இயற்றிய ஸ்தோத்திரத்தில்:

"அன்னை சாரதாதேவியின் சரித்திரம் பவித்திரமானது வாழ்வும் பவித்திரமானது, அவரது சொரூபம் பவித்திரமானது, அப்படிப்பட்டவளை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன்'' என்று வணங்கியுள்ளதைப் பின்பற்றி நாமும் அன்னையை வணங்கி அவரின் ஆசிதுணைக் கொண்டு வாழ்வாங்கு வாழ முற்படவேண்டும்.

### சுவாமி சித்ருபானந்தா

டைய பார்வைக்கு அப்பால் வாழ்ந்தவர். 1894ம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் மேல்நாட்டில் இருந்து 'உங்களில் ஒருவரும் அன்னையின் மகத்தான வாழ்வை அறியமுடியவில்லை. காலக்கிரமத்தில் அறிவீர்கள்' என்று கூறியிருக்கிறார்.

உலகியலில் உள்ளவர்கள் மற்றவர்களுடைய கண்ணில் படும் படி படாடோபமாக செயல் புரிவார்கள். அன்னை சாரதாதேவி தமது வாழ்வில் எச்செயலையும் ஒரே மனத்துடன் அடக்கமாகவும் படாடோபமின்றியும் செய்தார்.

ஒரு அற்பபொருளாயினும் நாம் அவமதிக்கக்கூடாது. வீட்டைத் துப்பரவு செய்யும் விளக்குமாற்றைக் கூட உபயோகித்த பிறகு அதைப் பக்குவமாக வைக்கவேண்டும் என்று ஒரு பெண்ணுக்குக் கூறியுள்ளார் ஒரு ஆச்சிரமத்திற்கு அவர் சென்றபொழுது அங்கு உள்ளவர் ஒரு வெற்றுப்பெட்டியை தூர வீசிய பொழுது அதை அப்படி எறியக்கூடாது

சமைத்துப்போடுவார். இவர்களுக்காக ஒவ்வோர்வீடு வீடாகச் சென்று பால் இரந்துகேட்டு வருவார். தாய்மையின் இருப்பிடமான சாரதாதேவியார் தனது சொந்த நான் கருதாது சீடர்களுக்கு. பக்தர்களுக்கு நலிவுற்றவர்களுக்காக 67 ஆண்டுகள் அயராது சேவை செய்துள்ளார்.

கையெழுத்தை சரியாக போடத் தெரியாதவராக இருந்தும் சகோதரி நிவேதிதை ஆரம்பித்த பாடசாலையை ஆரம்பித்து வைத்து படித்து முன்னுக்கு வரவேண்டிய பெண்களைப் படிக்க விடுவது சாலச் சிறந்தது என்ற கருத்தை வெளியிட்டார்.

சாரதா தேவியின் வாழ்வு இக்காலப் பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. இரது அடக்கம், அன்பு, தூய்மை, பொறுமைக்கு பெண்கள் முயற்சிக்க வேண்டும் ஒருநாள் காட்டு வழியாகச் சென்று ஒரு இடத்தில் தங்கி உணவு சமைத்த பொழுது அன்னம் உள்ள பானையை எடுக்கும்போது தவறிவிழுந்து உடைந்துவிட்டது ஒருவித சலனமும் இல்லாது மண்படாத அன்னத்தை குருதேவருக்கு படைத்துவிட்டு

### அன்னையின் வழியில்



அன்னைஸ்ரீ சாரதாதேவியின் ஜயந்திவிழா இன்று கொழும்பு வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கின்றது. இதில் விசேஷம் என்னவென்றால் 1970 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சாரதா சமித்தி இக்கொண்டாட்டத்தை தனக்கென உருவாக்கி கொண்ட புதிய கட்டிடத்தில் கொண்டாடுவதுதான்.

ராமகிருஷ்ண மிஷன் ஆதரவில் இச்சமித்தி சிறப்பாக செயல்பட்டு வளர்வதற்கு இச்சபையின் பொறுப்பாளராக விருந்துவரும் சுவாமி பிரேமாத்மானந்தாவின் சோர்வற்ற

(5ம் பக்கம் பார்க்க)

## நாட்டின் மனச்சான்று:

## மறைந்த சட்டமேதை நடேசன்

போல நல்ல நாயகத்தின் மனித உரிமையை வென்று கொடுத்து அவரை ஒரு தொண்டர் நாயகமாக்கிய பெருமை மறைந்த நடேசன் கியூ சீயின் வெற்றிப் பட்டியலில் இன்றும் துலங்குகிறது.

மனித உரிமைக்காக வழக்காடுவதிலேயே அந்திய நாளைச் செலவழித்த சட்டமேதை நடேசன் பேர்னாட் ஷாவைப்போல். பேற்றிராண்ட் ரசலைப்போல நூறு வயதுக்கு வழும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

சட்டத்திலும் பார்க்க அவருக்கு ஆரோக்கிய வாழ்வு மிகமுக்கியமாகக் காணப்பட்டதால் போகுமிடமெங்கும் மக்கள் இயற்கை வாழ்வு வாழ வேண்டுமென்றுகூறிய அவர் அதற்குத் தம்மையே உதாரணமாக எடுத்துக்கூறுவார், சுகவாழ்வுக்குரிய உணவும், தேகப்பியாசமும் எவ்வாறு அமையவேண்டுமென்பதையும் விளக்கும் போது அவருடைய தெளிந்த சிந்தனை, போலியை இனங்காணல் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறமை வெளிப்படும்.

நீதிமன்றங்களில், இந்நாட்டிலும், பிரிட்டனிலும் இவருக்குக்கிடைத்த மதிப்பு சட்டத்தின் தாற்பரியத்தை குறிப்பிட்ட வழக்கில் பிரயோகிக்கும் நுணுக்கமான திறமை என்று கூறப்படுகிறது.

கடைசியாக எங்கள் பத்திரிகை தலைவரை யாழ்ப்பாண இல்லத்தில் சந்தித்த போது எங்கள்கண்முன் 'ஈழநாடு' ஆசிரிய தலையங்கத் தொகுப்பாகிய 'ஊரடங்கு வாழ்வு' என்ற நூலின் பல பிரதிகளை பணம்கொடுத்து வாங்கி மதிப்பளித்தார்.

எங்கு அநீதி உண்டோ, எங்கு பொய்யும் புரளியும் உண்டோ, எங்கு மனிதன் மனிதனை, அரசு மனிதனை, மனிதன் அரசைச்சுரண்டும் பணியில் காணப்படுகிறதோ அங்கு மனித குடியுரிமை இயக்கப் பெருந்தலைவன், சட்டஅறிஞர்களின் வழிகாட்டியும் பெருநண்பனுமான நடேசனின் குஞ்சிதபாதத்தைக் காணலாம்.

### பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம்,செவ்.

யாழ். சைவபரிபாலன சபை மாணவர்களுக்கிடையே 3 பிரிவுகளாகப் பண்ணிசைப்போட்டியொன்றினை நடாத்தவுள்ளது 3பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டி முடிவு திகதி ஜனவரி 15ம் திகதியாகும். போட்டி பெப்ரவரி 4ம் திகதியும்,பரிசு வழங்கல் பெப் 19ம் திகதியும் நிகழும்.

6ம், 7ம் ஆண்டு மாணவர்களுக்கான கீழ்ப் பிரிவுப் போட்டியிலும் 8ம்,9ம் ஆண்டுமாணவர் மத்திய பிரிவுப் போட்டியிலும் 10ம், 11ம் பிரிவு மாணவர் மேற்பிரிவுப் போட்டியிலும் பங்குபற்றலாம்.

(5-ம் பக்கம் பார்க்க)

## பூஸா முகாமில் ————

# தடுத்து வைக்கப்பட்டவர்களில்

## கிழக்குமாகாணத்தவரே அதிகம்!

### வன்னி சமாதானக்குழு தகவல்

வவனியா, செவ்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் காலி பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்தவர்கள். அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே அதிகமானோராவார். வவனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களும் இங்குள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த சுமார் 2500 இளைஞர்கள் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி முகாமிற்கு கடந்த வாரம் விஜயம்செய்துவிட்டுத் திரும்பிய வன்னி சமாதானக் குழுவே இத்தகவலைத் தெரிவித்தது.

வன்னி சமாதானக் குழுத் தலைவரும், வவனியா - கணடிவ்தி விகாரை பிரதம பிக்குவுமான சீயம்பலகஸ்வல விமலதார தேரோ தலைமையில் வவனியாவைச் சேர்ந்த நூறு பெற்றோர் பூஸா சென்று திரும்பியுள்ளனர்.

சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் பெற்றோர் பூஸாசென்று தமது பிள்ளைகளைப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பூஸாசென்று திரும்பியோர் தந்த தகவலின்படி:-

தாம் தமது புதல்வர்களுக்கு ஆசையோடு செய்து கொண்டு போன இனிப்பு, மற்றும் பலகார உணவு வகைகளை வழங்க இராணுவத்தினர் அனுமதி அளித்தனர் என்றனர்.

சிலருக்கு சிரங்கு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

இம்முகாம் பொறுப்பதிகாரியாக வவனியா ஆயுதப்படை முகாமில் இரண்டாவது இணைப்பதிகாரியாக முன்னர் கடமையாற்றிய கேணல் ரஞ்சன் டீசில்வா பணியாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மழையினால் வேளாண்மை பாதிப்பு

கிளிநொச்சி, திங்.

கிளிநொச்சியில் பெய்த மழை காரணமாக காலபோக வேளாண்மை பெரிதும் பாதிப்படைந்துள்ளது நெற்பயிருக்கு ஒருவித நோய் ஏற்பட்டுள்ள அதேவேளை பல வயல்களில் நெல்லினங்கள் முற்றாக அழிந்து விட்டதாக கிளிநொச்சி விவசாயிகள் கவலை தெரிவித்தனர். இதேவேளை மழை காரணமாக அழிந்துவிட்ட நெல்வயல்களில் மீண்டும் விதைப்பு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கட்டுடையில், பிரதான வீதிக்கு அருகாமையில் 7 பரப்புக் காணியும், வீடும், கிணறு மின்சார வசதியுடன் தென்னை, மாமரம், பலா மற்றும் பிரயோசனங்களுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு: மு. திருநாவுக்கரசு உபதபாற் கந்தோருக்கு அருகாமையில், கட்டுடை, மானிப்பாய் C 6491

### தேவை

தையல்வேலைதெரிந்த பெண்பிள்ளைகள் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும் Ramany Ladies Tailoring. 615 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் (காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முன்பாக, மேல்மாடியில் அமைந்துள்ளது), தொலைபேசி இல: 24841 [C-6493]

மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ கூ சங்கம்

### வெற்று பரல்கள் தேவை

எமது சங்கத்திற்கு 45 கலன் (210 லீற்றர்) கொள்ளக்கூடியதும் 24 கேஜ் உடையதுமான நல்லநிலையில் உள்ள 50 வெற்று பரல்கள் தேவை. இவற்றை சங்கத்தில் கொண்டு வந்து ஒப்படைக்கக் கூடியவர்கள் கூறுவிலையை அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதத்தில் 29-12-86-க்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்
A 3370

மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### வெற்றுச்சாக்கு கேள்வி அறிவித்தல்

3500 வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 26 - 12 - 86ம் திகதிவரை சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்

பொதுமுகாமையாளர்
மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம்
(A-3369)


# 1வது கிரிக்கெட் டெஸ்ட்: வெற்றி-தோல்வி இல்லை

## அசருதீன் – 199

(புதுடில்லி)

இலங்கை - இந்திய கிரிக்கெட் அணிகளிடையே கான்பூரில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி 'வெற்றி-தோல்வி'யின்றி முடிவடைந்தது

நேற்றைய ஆட்டம் முடிவடையும் போது, இந்திய அணி 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 676 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணி கிரிக்கெட் டெஸ்ட் சரித்திரத்தில் மிகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றது இதுவே முதல் தடவையாகும்.

இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்களான அசருதீன்-199 ஓட்டங்களுடனும், கவாஸ்கர்-176 ஓட்டங்களுடனும், காப்டன் கபில்தேவ் -163 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

வீரர் கவாஸ்கர், இப்போட்டியில் பெற்ற 'செஞ்சரி'யுடன் டெஸ்ட் ஆட்டத்தில் 34-வது செஞ்சரியைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 420 ஓட்டங்களைப் பெற்றது. (வி)

## பண்ணிசை

[4ம் பக்கத் தொடர்ச்சி]

பாடசாலை, மன்றங்களூடாகப் பங்குபற்றுவோர் பிரிவுக ஒருவரே பங்கு பற்றலாம். மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர்மேற்படிசபைபடிட்சைச் செயலாளர் வ கந்தசாமியுடன் தொடர்பு கொள்ளலாம் இப்போட்டியின் முதல் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படவுள்ளது. (ப)


### விண்ணகவாழ்வின் ஓராண்டு நினைவஞ்சலி



பொ. குமாரசாமி

[அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் வடபிராந்திய இ. போ. ச சாரதி)

மண்ணுலகில்: 14-1-1922
விண்ணுலகில்: 2-1-1986
திதி: 22-12-86

அன்னாரின் ஆத்மா சாந்தியடையவதாக!

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
பண்டத்தரிப்பு
[C-6420]


## அன்னையின்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

உழைப்பே காரணம். சுவாமிகள் 1954ம் ஆண்டுமுதல் இம் மடத்துக்குப் பொறுப்பாக இருந்துவருகின்றார். சுவாமி தமது இளம்வயதில் துறவு பூண்டார். சிங்கப்பூர்சென்று அங்குள்ள ராமகிருஷ்ணமிஷனில் தம்மை அர்ப்பணித்து சமயஞானம் பெற்று உயர்ந்தார், சுவாமி பிரேமாத்மானந்தா என்ற பெயருடன் கல்கத்தா பிரதான மடத்தில் பணிபுரிந்தார்.

எதிலும் கவனமாகவும், முறைதவறாமலும் கட்டுப்பாட்டுடனும் செயல்படும் சுவாமிகளின் பழக்கவழக்கங்கள் அவரது ஆத்மீக முதிர்ச்சியின் வெளிப்பாடுகளே. அமைதியான சுபாவமுள்ள சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் வைதீக குடும்பமொன்றை சேர்ந்தவர்.

இன்னும்பல ஆண்டுகள் திடகாத்திரத்துடன் வாழ்ந்து பணியாற்ற அவருக்கு அன்னையின் அருள் என்றென்றும் இருக்குமாக.

- சதா

## கோட்டைக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கோழிக்கடைச்சந்திவரையே சுமார் 35 முதல் 40 இராணுவத்தினர் வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

புலிகள் இவர்களை விரட்ட 'கனன்சார்ஜ்' மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பேராசிரியர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கலைக்கழக நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

1976ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாண தொல்லியல் கழகம் நடாத்திய பிராமிச்சாசன வியலமைநாட்டைத் தொடக்கி வைக்கவந்த பொழுது தனது நூல்களை யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்புச் செய்வேன் என்று பேராசிரியர் ஒ எச் த விஜசேகர வாக்குறுதி அளித்திருந்தார். தற்போது அதனை அவர் நிறைவேற்றியுள்ளதாக யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.


### இப்பொழுது காண்பிக்கப்படுகிறது லிடோ

10-30, 2-30, 6-30

மோகன் - சுஹாஷினி மூர்த்தி நடித்த
நெஞ்சத்தைக் கிள்ளாதே
கலர் [புதிய பிரதி]
நக்தார் வெளியீடு
ஆகாயத் தாமரைகள்
[புதிய வெளியீடு]

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
10-30, 2-30- 4.30,6-30

ஆண்களை காதல் கேளிக்கைகளில் ஈடுபடுத்தி நினைத்ததை முடிப்பதில் அவள் வல்லவள். மயிர்கூச்செறியும் சண்டைகள் நிறைந்த

Samantha Fox
in
TOO HOT TO HANDLE
Action, Thrill, Sex
(Strictly Adults only)

### மிது வீடியோ மூவிஸாரின் இன்றைய வெளியீடுகள்

1. சரத்பாபு, சந்திரமோகன், அஞ்சலிதேவி, காஞ்சனா நடித்த
★ ஸ்ரீ சிருஷ்டி சாயிபாபா ★
[சிறந்த பிரதி]

2. எஸ். பி. பாலசுப்பிரமணியம் எஸ் பி. சைலஜா, மலேசியா வாசுதேவன் ஆகியோர் கங்கை அமரனின் இசை அமைப்பில் லண்டனில் நடத்திய
★ இசைக்கச்சேரி ★
[ஒரிஜினல் பிரதி]

மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி
[A 3371]


# பத்திரிகைச் சுதந்திரத்தை நிலைநாட்டியவர் அமரர் நடேசன்



சர்வதேச புகழ் படைத்த சட்ட வல்லுநரும், இலங்கையின் பிரபலமிக்க இராணி அப்புக்காத்துமான முன்னாள் செனட்டர் நடேசன் கியூ. ஸி. நேற்று முன்தினம் தமது 82 வயதில் காலமானார் என்ற செய்தி சட்டத் துறையில் உள்ளவர்களுக்கு மாத்திரமல்ல, இந்த நாட்டில் அரசியல் நேர்மையையும், மனித உரிமைகளையும் மதிக்கும் எவருக்குமே கவலையைக் கொடுத்திருக்கும்.

பத்திரிகைச் சுதந்திரத்துக்காக அவர் நடத்திய பெரும் போராட்டம் சர்வதேச மட்டத்தில் வியப்புடன் நோக்கப்பட்டது அரசியல் சட்டத்தை மீறினார் என்ற குற்றச்சாட்டின் மீது அவர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டபோது உலகம் முழுவதுமே அவ்வழக்கை ஆர்வத்துடன் உன்னிப்பாக அவதானித்தது.

சட்ட நிபுணராகவும் நேர்மையான அரசியல் மேதையாகவும் திகழ்ந்த அவர் பரோபகாரியாகவும் விளங்கியுள்ளார்.

பத்திரிகைத் துறையின் சுதந்திரத்துக்காக அமரர் நடேசன் ஆற்றிய பணியை அத்துறையில் உள்ளவர்கள் என்றென்றும் நன்றியுடன் நினைவுகூர்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அமரர் நடேசனின் இறுதிக்கிரியைகள் நேற்று கொழும்பில் நடந்தேறின .— 'பெ'

## புதிய ஆண்டில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

எனவே இராணுவப் பாவிப்புக்கே தற்போதைய இறங்குதுறை அதிகம் உட்பட்டுவருவதாலும் இப்பாவனை அதிகரித்திருப்பதன் காரணமாகவும் கடல்ரோந்து நடவடிக்கைகளின் பொருட்டும் புதிய இறங்குதுறை அமைப்புவேலைகள் ஆரம்பமாகவுள்ளன. இது விசாலமானதாகவும், இராணுவ நடவடிக்கைகளுக்கேற்றதாகவும் அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிப்புரைகளும் ஆலோசனைகளும், நிதி ஒதுக்கீடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க கடந்த சில வாரங்களாக கப்பல்களில் இராணுவத்தினருக்கென கொண்டுவரப்பட்ட இறக்கப்பட்ட முட்டைகளும் சாக்குகளும் முகாம்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. முகாம்களைச் சுற்றி போடப்பட்டுள்ள முட்கம்பி மண்மூடை அரண்களை மேலும் பலப்படுத்தும் வகையிலேயேஇவை இறக்கப்பட்டிருப்பதாகதெரிவிக்கப்பட்டது.

## தமிழ் போராளிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த குற்றச் சாட்டுக்கு பதிலளிக்கும் முகமாக தமிழக முதல்வர் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறியதாக இந்து பத்திரிகை அறிவித்துள்ளது.

தமிழக முதல்வர் திரு. எம் ஜி ஆர். மேலும், இது குறித்து கருத்து வெளியிடுகையில் தாம் அன்றும், இன்றும் தமிழ்ப் போராளிகள் அமைப்புகளிடையே பாரபட்சம் காட்டாததுடன் சகல அமைப்புக்களையும் சமமாக மதித்து வருவதுடன், சகலத் தலைவர்களையும் தனிப்பட்ட ரீதியில் சந்தித்து வருவதாகவும் சகல அமைப்புக்களையும் ஐக்கியமாக செயல்படும்படி தாம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்

இதேவேளை தமிழ் போராளிகள் ஆயுதங்களை தம்முடன் கொண்டு செல்வதற்கு தமிழக அரசினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரா)

## ரயில் பாலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தகர்க்கப்பட்டுள்ளது.

இக்குண்டு வெடித்ததினால் ரெயில்பாலம் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் இருபது சிலிப்பர் கட்டைகள் தூக்கி எறியப்பட்டுள்ளன.

இக்குண்டு வெடிப்பின் சேதம்பற்றி அறிவதற்காக ரெயில்வே குழுவொன்றும், பாதுகாப்புப் படையினரும் ஸ்தலத்திற்கு விரைந்துள்ளனர்.

சில மாதங்களுக்கு முன் பாண்டியன் குளத்திலுள்ள பிரதான ரெயில் பாலம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பலாலி

1ம் பக்கத் தொடர்ச்சி)

திடீர்த்தாக்குதல் நடத்தியதாகவும், தொடர்ந்து ஸ்தலத்தில் இரத்தக்கறையுடன் பல தலைக்கவசங்கள் சேதமுற்ற நிலையிலும், கைவிடப்பட்ட நிலையிலும் இருக்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

இத்தாக்குதல் சம்பவத்தை யடுத்து அப்பகுதிக்கு ஹெலிகொப்டர் தாக்குதலை நடத்தியபோதும் எதிர்த்தாக்குதலையடுத்து அவை பின்வாங்கின எனவும் கூறப்பட்டது.

இத்தாக்குதலையடுத்து நீர்ப்பெட்டியல் கடற்கரைப்பகுதி வழியாகவும் இராணுவம் தொடர்ந்து முன்னேற முயற்சித்தவேளை அம்முயற்சியும் 'கனன் சார்ஜ்' தாக்குதலால் முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஹற்றனில். .

(1ம பக்கத் தொடர்ச்சி)

அவரசகாரைத் தொடர்ந்து செலுத்திச் சென்றவர்கள் அக்கார் மலையொன்றுடன் மோதியதையடுத்து தமது பயணத்தைத் தொடர முடியாமல் காரை இடைநடுவில் விட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் இக்கடத்தல் சம்பவமானது நான்காவது தடவையாக இப்பகுதியில் நடைபெற்றுள்ளன குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவங்களால் இப்பகுதியில் வாழும் மக்கள் மாலை வேளைகளில் வெளியில் நடமாட அஞ்சுகிறார்கள். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ்த் தாயகம் ஒன்றுகவே இருந்தது; ஒன்றுகவே இருக்கிறது ஒன்றுகவே இருக்கவேண்டும்"

## இ. பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணி

தமிழ்த்தாயகம் ஒருபுதிய கோட்பாடு அல்ல. தமிழ்த் தாயகம் என்று குறிப்பிடும் பொழுது அந்நேத் தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்ற கருதுகிறேன். இத் தாயகம் இற்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது இது அங்கீகரிக்கப்படவேண்டும், பாதுகாக்கப்படவேண்டும். தமிழ் பேசும் மக்களின் இச்சாயத்தைப் பாதிக்கக்கூடிய முறையில் செய்யப்பட்டவை யாவும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

சிலர் தாயகத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் 'இணைக்கப்படவேண்டும்' என்ற பதத்தைப் பரவலாக உபயோகிக்கிறார்கள் சரியான கருத்து என்னவென்றால் தமிழ்த்தாயகம் ஒன்றுகவே இருந்தது, ஒன்றுகவே இருக்கிறது, ஒன்றுகவே இருக்கவேண்டும். இது தமிழ் பேசும் மக்களின் விருப்பத்துக்கு மாருகப் பிரிக்கப்படக்கூடாது. ஒரு ஜனநாயக அமைப்பில் தமிழ்த்தாயக அமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்று தமிழ் பேசும் மக்கள் அல்லாத எவரும் முடிவு செய்ய உரித்தோ அதிகாரமோ இல்லை.

இலங்கை இரண்டு தேசிய இனங்களைக் கொண்ட ஒரு தீவாகும். தமிழ் பேசும் மக்களைக் கொண்ட தமிழ்தேசிய இனம். சிங்களம் பேசும் மக்களைக்கொண்ட சிங்களதேசிய இனம்.

தமிழ்த் தேசிய இனம் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ளது.

நிர்வாக வசதிக்காக ஆங்கிலேயர் இலங்கையை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு அரசாங்க அதிபரை நியமித்திருந்தனர். அதன் பின்பு இந்த மாகாணங்களில் மாவட்டங்களை அமைத்து அரசாங்க அதிபர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும நியமித்தார்கள் தமிழ்த் தாயகத்தில் இரண்டு மாகாணங்களும் எட்டு மாவட்டங்களுமுள்ளன

அது கிழக்குப் பாகிஸ்தான் மேற்கு பாகிஸ்தான் போல இடையில் பிளவுபடாது ஒன்றுகவே இருந்தது

தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தாயகம் இருந்ததா? என்று ஒரு கேள்வி எழுகின்றது.

1597ம் ஆண்டு கோட்டை அரச மன்னன் ஒரு மரண சாதனம் மூலம் தனது இராசதானியை போர்த்துக்கேய மன்னனுக்குக் கையளித்தான். இது பற்றி ரூபேரு எழுதிய (Ceilao இலங்கை என்ற புத்தகத்தில் 90 - 91ம் பக்கத்தில குறிப்பிடப்பட்டுள்ளது கோட்டை இராசதானியின் எல்லைகளை அதில் குறிப்பிடும் பொழுது அப்பொழுது யாழ்ப்பாண இராசதானி (Jaffna Patam) ஒன்று இருந்தது என்றும் அதை ஒரு தமிழ் மன்னனே ஆண்டு வந்தான் என்றும் கூறப்பட்டுள்ளது.

இலங்கை அலமனுக்கின் 1855ம் ஆண்டுப் பதிப்வட்டில் 3ம், 4ம், 5ம் பக்கங்களில் உள்ள கிளைகோன் குறிப்புகளில் பின்வருமாறு கூறப்படுகிறது.

'2டி யாழ்ப்பாண இராசதானி (Jaffna Patam) அதன் நீதி நிர்வாகத்தை புத்தளத்திலிருந்து மன்னார் வரையும் மன்னாரிலிருந்து குமுனை அல்லது குப்புக்கள் ஆறு வரையும் பரந்துள்ள வடக்குக் கிழக்குப்பகுதிகளில் செலுத்தி வந்தது." என்று கூறப்படுகிறது

1926 ம் ஆண்டு மாணவர் காங்கிரஸின் கூட்டத்தில் பேசிய காலஞ்சென்ற திரு எஸ் டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா

"கடந்த கால சரித்திரத்தை ஆராயும் பொழுது தமிழர், கீழைத்தேய சிங்களவர், கண்டிச்சிங்களவர் ஆகிய மூன்று சமூகங்களும், 1000 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் வாழ்ந்து வந்தபோதும் அவர்களின் தனித்தன்மையை விட்டுக்கொடுத்து ஒன்றுசேரும் நோக்கம் எப்பொழுதும் இருக்கவில்லை. அவர்கள் தங்கள், மொழி வழமைகள், சமயம் ஆகியவற்றைப் பாதுகாத்து வந்துள்ளனர். அவர்களது தனித்தன்மையை சிறிது சிறிதாக அழிக்கும் நோக்கம் யாருக்கும் இருந்தால் அவர்கள் ஒரு கொடூரமான மனிதர் என்று கருதப்படவேண்டும்"

இது சிலோன் மோர்னிங் லீடர் என்ற பத்திரிகையில் 14-7-1926 ந் திகதி இதழில் உள்ளது

கண்டித் தலைவர்கள் டொனமோர் ஆணையாளர்களுக்குச் செய்த சிபாரிசில் இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இலங்கை மூன்று சுயாட்சிப் பகுதிகளாக பிரிக்க வேண்டுமென்றும் அதிலொன்று தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரு சுயாட்சிப்பகுதியாக இருக்க வேண்டுமென்றும் கண்டி மாகாணங்கள் மற்றொன்றாகவும், பெரும்பாலும் கீழைத்தேய சிங்களவரைக் கொண்ட தென்மாகாணமும் மேல் மாகாணமும் மூன்றாவதாகவும் இருக்க வேண்டுமென எடுத்துரைத்தனர் இதை டொனமோர் ஆணைக்குழு அறிக்கையில் 28ம் பக்கத்தில் பார்க்கலாம்

எனவே ஒரு தமிழ்த் தாயகம் இருந்தது பற்றி கிளைகோன் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர் டி பண்டாரநாயக்காவாலும் அக்கோட்பாடு ஏற்கப்பட்டுள்ள தொன்றுகும்

எனவே வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பேசும் மக்கள் ஓர் குறிக்கப்பட்ட எல்லைக்குள் தமக்கென ஒரு மொழியையும் கலாசாரத்தையும் கொண்ட ஒரு தேசிய இனமாகும். இத் தமிழ்த் தேசிய இனம் அதனுடைய மொழியின் பாவனை பறிக்கப்பட்டு அரசின் திட்டமிட்ட குடியேற்றத்தால் அதன்காணி குறைக்கப்பட்டு பெரும்பான்மைத் தமிழ்ப்பகுதிகள் சிறுபான்மைத் தமிழ்ப்பகுதிகளாக மாற்றப்படக்கூடும் என்ற பயம் எழுந்தது.

### திட்டமிட்ட குடியேற்றம்

இந்தப் பயம் 1948ம் ஆண்டு அம்பாறை, பதவியா போன்ற இடங்களில் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்கள் மூலம் தமிழ்ப் பகுதிகளில் சிங்களவரைக் குடியேற்றியதன் மூலம் தக்க காரணத்துடன் எழுந்த பயமாகும்.

1956ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி இலங்கையில் ஒரே அரசகரும மொழியாகச் சிங்களத்தை ஆக்குவதற்கு பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. இது ஏற்கனவே 1943ம் ஆண்டில் ஸ்ரேற் கவுன்சல் (State Co- uncil சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் அரசகரும மொழிகளாக ஆக்கிய தீர்மானத்தை மாற்றியமைத்தது.

ஆனாலும்பல மொழிகளுள்ள நாட்டில் ஒற்றையாட்சி பல பிரச்சினைகளை உண்டுபண்டுமென்று கூறியதுடன் ஒவ்வொரு சமூகத்தின் தனித்துவமும் பேணப்பட வேண்டுமென்னும் கருத்தையும் கொண்டிருந்த திரு எஸ். டபிள்யு ஆர் டி பண்டாரநாயகா ஒரு சமாதானத்தை ஏற்படுத்தும் முகமாக திரு. எஸ் ஜே வி செல்வநாயகம் அவர்களுடன் 26-7-1957ல் ஒரு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டார். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்பல் வேறு விடயத்துடன்:-

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழி தமிழாக இருக்க வேண்டுமென்றும் அதே நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பேசாத மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட வேண்டுமென்றும்

(ஆ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிரதேச சபைகள் அமைக்கப்பட வேண்டுமென்றும் மாகாண எல்லையைத் தாண்டியும் அச்சபைகள் ஒன்றிணைந்து கொள்ளலாமென்றும், காணி அபிவிருத்தி குடியேற்றம் ஆகியவற்றின் மேலுள்ள அதிகாரம் இப்பிரதேச சபைகளில் இருக்குமென்றும்,

(இ) தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட எல்லைக்குள் காணிகளை கொடுக்கு பொது ஆட்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் மட்டுமன்றி அத் திட்டங்களில் வேலை செய்யவேண்டிய தொழிலாளர்களையும் தெரிவு செய்யும் அதிகாரமும் பிரதேச சபைகளுக்கு உண்டென்றும் இணங்கப்பட்டது.

இங்கே நாம் திரு எஸ். டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயகா வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒரு மொழி வாரிப் பகுதியாக அதாவது ஒரு தமிழ் பேசும் பகுதியாக அங்கீகரித்திருப்பதைக் காண்கின்றோம். தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பிரதேச சபைகளே அங்குள்ள குடியேற்றத்திற்குப் பொறுப்பாக இருக்குமென்ற அதிகாரம் ஒரு தமிழ்த் தாயகக் கோட்பாட்டை ஒப்புக் கொள்வதொன்றுகும்

1958ம் ஆண்டுவடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்கும் தமிழ் மொழி விசேட மசோதா ஆக்கப்பட்டவுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒரு மொழி வாரிப் பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த திரு. டட்லி சேனநாயகா இப்பிரச்னையை எவ்வாறு அணுகுகிறார் என்று பார்ப்போம. அவர் திரு எஸ். ஜே வீ செல்வநாயகம் அவர்களுடன் 24-3-1965ல் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம்:-

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாகவும் பதிவேட்டு மொழியாகவும் ஆக்குவதற்கு தமிழ் மொழி விசேட மசோதாவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும்,

(ஆ) வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியில் சட்ட நடவடிக்கைகளுக்கும் வழக்குகள் நடத்துவதற்கும் பதிவுகள் செய்வதற்கும் வழிவகுத்து நீதிமன்ற மொழிச் சட்டம் திருத்தப்படுமென்றும்,

(இ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேற்றத் திட்டங்களில் ஆட்களை அமர்த்தும் பொழுது பின்வரும் முறை கையாளப்படுமென்றும்:

(1) முதலாவதாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஒரு மாவட்டத்தில் குடியேற்றம் நடைபெறும் பொழுது முதலில் அம்மாவட்டத்திலுள்ள காணி இல்லாதவர்களுக்கும்,

[2] இரண்டாவதாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும்,

[3] மூன்றுவதாக அத்தீவில் மற்றைய பகுதிகளில் வசிக்கும் பிரஜைகளில் தமிழ் பேசும் பிரஜைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது

1966ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி திரு டட்லி சேனநாயகா தமிழ் மொழி விசேட மசோதவை நடைமுறைப்படுத்தும் பொருட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாகப் பாவிப்பதற்குரியசட்டவாக்கங்களை உருவாக்கினர்.

தமிழ் மொழியை வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக ஏற்றதன் மூலம் மொழிவாரியாக ஒரு தமிழப் பிரதேசத்தை ஏற்றுக் கொண்டதுடன், தமிழ் பேசும் மக்களுக்கு முதலிடம் கொடுத்துத் தமிழ்மொழி பேசாத மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேற்றப்படுவதற்கு கட்டுப்பாடு விதித்ததன் மூலம் ஒரு தமிழ்த் தாயகக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவே கொள்ள வேண்டும்.

[தொடரும்]

## திருவாசகம் ஓதுதல்

யாழ்ப்பாணம், செவ் யாழ் சைவ பரிபாலன சபை திருவாசகம் முற்றும் ஓதல் 1ம் திகதி காலை 8 மணி முதல் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்த்தவுள்ளது. (ஊ)

## சமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், செவ் வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடாத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை பெப்ரவரி மா. ம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை சமய அறிவுக் கட்டுரை, சமய அறிவுப் போட்டிப் பரீட்சை, திருமுறை மனனப் பரீட்சை. நீதிநூல் மனனப் பரீட்சை போன்ற பிரிவுகளாக நடாத்தப்படும். (ஒ)

## ஐக்கிய நாணய சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள் கொக்குவில் மத்திய ஐக்கிய நாணயசங்க அங்குரார்ப்பணம் கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர் தலைவர் நா சிவமுத்துலிங்கம், உபதலைவர் க. பராசசிங்கம், பொருளாளர் பொ. சின்னத்துரை, செயலாளர் க. துரைராசா மேலும் நா. நடராசா, வ குலசிங்கம் நா. சண்முகப்பிள்ளை ஆகியோர்கொண்டசெயற்குழுவும் அமைக்கப்பட்டது [எ]


## பிரயாண ஒழுங்குகள்

### லிபியா:-
ஒயில் கொம்பனி லேபறேஸ் 1987-ம் வருடம் 16-ம் திகதிக்கு மேல் பயணம் தொடங்குகின்றது. 200 வேலையாட்கள் தேவை. செல்ல விரும்புவோர் வேண்டிய ஆவணங்களை எமமிடம் சமர்ப்பிக்கவும்.

### சவுதி அரேபியா:-
கிளீனேஸ் – 25 வயது முடிந்தவர்கள்மட்டுமே எடுக்கப்படுவார்கள். 200 பேர் தேவை. உடன் வந்து சந்திக்கவும்.

### குவைத்:-
பணிப் பெண்கள் – 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் உடன் நேரில் வரவும்.

### டுபாய்:-
பணிப்பெண்கள் – 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் மட்டும்.

### குவைத்:-
ஹவுஸ் றைவேஸ் - வயது 18—35 வரை.

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும். சகலரும் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்,**
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னுல் உள்ள நியூ லிங்கம் சலூன் ஒழுங்கையால் வரவும்.

[A-3262]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்னை குறித்து——

# "அரசுடனும் இளைஞர்களுடனும் பேசித்தீர்க்க முயற்சிக்கிறேன்" — ஏ. ரி. ஆரியரத்ன

வவுனியா திங்கள்:

"அரசாங்கத்திலுள்ள இராணுவ உயர் அதிகாரிகளுடனும், வடபகுதியில் ஆயுதம் ஏந்தி உரிமைக்காகப் போராடும் தமிழ் இளைஞர்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி இந்த நாட்டில் மனிதன் அநியாயமாக இறப்பதினைத் தவிர்க்க முனைவதுடன் இனப்பிரச்னைக்கும் சமாதானத் தீர்வு ஏற்பட முயற்சிகளை மேற்கொள்ள உள்ளேன்."

இவ்வாறு சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்தின தெரிவித்தார்.

அண்மையில் சர்வோதயத் தலைமை அலுவலகத்தில் வன்னி சமாதானக் குழு பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய போதே மேற்கண்ட கருத்தினை இவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது கலாநிதி ஆரியரத்தின மேலும் கூறியதாவது:-

"அரசு இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இரு திட்டங்களை வைத்துள்ளது. ஒன்று இராணுவ நடவடிக்கை, அடுத்தது அரசியல் தீர்வு இராணுவ நடவடிக்கையில்தான் நம்பிக்கை கொண்டு அரசியல் தீர்வு முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

"ஆனால் நான் ஒரு சமாதான தீர்வுக்கான நடவடிக்கையில் ஒரு திட்டத்தினை வைத்துள்ளேன் நான் அரசுடன் கடந்த மூன்று வருடங்களாக எதுவித தொடர்பும் இன்றி இருந்தேன். இப்போது மீண்டும் சமாதான முயற்சிக்காக அரசுடன் தொடர்புகளை ஏற்படுத்தவுள்ளேன்

"எனது சமாதான நடவடிக்கைகளைத் தாமதித்தே செய்யவேண்டியதின் காரணம் எனது சர்வோதய அமைப்பின் கீழ் நாற்பதாயிரம் தொண்டர்கள் உள்ளனர்.

"அவர்களுடைய எதிர்காலத் திட்டத்தினைக் கருத்தில் கொண்டே இந்நடவடிக்கையில் ஈடுபடவேண்டியுள்ளது.

எனவேதான் இத்திட்டத்தினை அமுல்படுத்தச் சமாதானக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு அந்த வகையில் அண்மையில் ஹட்டனில் இருந்து சிவனொளிபாத மலை வரை பாதயாத்திரை ஒன்றையும் நடத்தினேன்

"50 ஆயிரத்திற்கு மேற்பட்ட சகல இனமக்களும் இதில் கலந்துகொண்டு இந்தச் சமாதான யாத்திரையின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தியுள்ளனர்." (எ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் செவ்

காரைநகர் தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை சங்க மண்டபத்தில் திரு க. வே. துரைராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினர்களாக யாழ். தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு கி. கோபாலரத்தினம் கிராம அபிவிருத்தி மாவட்ட அலுவலர் திரு. சிவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (கி)

## 15-வது நாள் நினைவு தினம்

யாழ்ப்பாணம் செவ்

சந்நிதிக்குரிய குருபவா சுவாமிகள் இறைபதம் சேர்ந்து பதினைந்தாவது நாள் பூர்த்தியானதையிட்டு இன்று யாழ் வங்சாலை வீதி ஆசிரமம், மண்கும்பான் வெள்ளைக்கடற்கரை ஆசிரமம் ஆகியவைகளில் வழிபாடு, மௌலவிகளின் ஓதல் என்பன நடைபெறும்.

"1987-ம் ஆண்டு யாழ். மாவட்ட——

# மருந்து விநியோகத்திற்கு ரூபா 250 லட்சம் தேவை"

சாவகச்சேரி திங்கள்

"தமிழ்ப் பிரதேசத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் சேவைகள் மிகவும் இன்றியமையாத தொன்றாகிவிட்டது. இவ்வாறான நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக சிறு சிறு நோய்களுக்கெல்லாம், அரசவைத்தியசாலைக்குச் செல்வோரின் தொகை பெருமளவு குறைந்துள்ளது. 1985ம் ஆண்டில் யாழ் மாவட்டத்தில் இருக்கின்ற ஆஸ்பத்திரிகளுக்குமருந்து விநியோகம் செய்வதற்கென 200 லட்சம் ரூபாய் பணம் செலவிடப்பட்டுள்ளது 1986ல் 225 லட்சமும், 1987ம் ஆண்டுக்கு 250 லட்சம் ரூபாயும் தேவைப்படுகின்றது"

இவ்வாறு நுணாவில் மேற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தின் முதலாவது ஆண்டு விழாவின் போது முதன்மை விருந்தினராகப் பங்குகொண்ட யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி ந. கனகசபை கூறினார்

ஆரம்ப சுகாதார நிலையத்தின் தலைவர் திரு பூ. வெற்றிவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின்போது. சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் செயலாளர் திரு த. நவரத்தினராசா மங்கள விளக்கேற்றிவைத்தார்

இவ்விழாவில வைத்தியகலாநிதிகள் ரீ. சோமசுந்தரம், எஸ். சண்முகநாதன் ரீ. கருணாநந்தன், வி. சின்னப்பு, திருமதி சாம்பசிவம் ஆகியோர் சுகாதார உரைகள் நிகழ்த்தினர்.

நிலையத்தின் சிறப்பு மலரை வைத்திய கலாநிதி ந. கனகசபை வெளியிட்டு வைக்க, ஓய்வுபெற்ற பட்டயக் கணக்காளர் திரு. த. சின்னையா பெற்றுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை திரு. ஓ. ஜெயக்குமார், டாக்டர் வி. சின்னப்பு ஆகியோர் பெற்றுக்கொண்டனர்

சுகாதாரத் தொண்டர்களுக்கான சுகாதார அறிவுப்போட்டியும் நடாத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஆரம்ப சுகாதார நிலையத்தாரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ஆரம்ப சுகாதார நிலையத்தின் செயலாளர் திரு எஸ். தண்டாயுதபாணி நன்றி கூறினார். (எ)

## தாபரிப்பு வழக்கில் கணவனுக்கு ஐயாயிரம் செலுத்த பணிப்பு

வல்வெட்டித்துறை திங்கள்.

இரண்டு வருடகாலமாகத் தன் மனைவிக்கும் இரு பிள்ளைகளுக்கும் தாபரிப்புப் பணம் கட்டத் தவறிய கணவனுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், உடனடியாக 5,000 ரூபா செலுத்தும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொலிகண்டி தமிழீழ கிராம நீதிமன்றத்தில் இத்தாபரிப்பு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது, இளவாலையைச் சேர்ந்த இந்நபர், பொலிகண்டியைச் சேர்ந்த பெண்ணைத் திருமணஞ் செய்து இரு பிள்ளைகளும் பிறந்தபின் குடும்பத்தினைவிட்டுப் பிரிந்ததால், சுமார் 3 வருடங்களின் முன் அரச நீதிமன்றத்தில் மாதாந்தம் 250 ரூபா தாபரிப்புப் பணமாகச் செலுத்தப்பட வேண்டும் எனப் பணிக்கப்பட்டு அத்தாபரிப்புப் பணத்தைச் செலுத்தி வந்தவர் கடந்த இரண்டு வருடகாலமாகப் பணத்தைக் செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டது

பொலிகண்டி கிராம நீதிமன்றின் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அழைப்பாணை கொடுக்கப்பட்டும் தவணைகளுக்குச் சமூகமளிக்காது இருந்தார் நீதிமன்றால் பிடிஆணை அனுப்பப்பட்ட பின் நீதிமன்றில் ஆஜராகியிருந்த அந்த நபரைத் தவணைகளுக்கு வரத் தவறியமைக்காக நீதிமன்ற விசாரணைக் குழுவினரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்

ஊர் நிலைமைகளைச் சாட்டாக வைத்துத் தன் மனைவி பிள்ளைகளுக்குத் தாபரிப்புப் பணத்தைக் கட்டத் தவறியமைக்காகவும் விசாரணையாளர்களினால் பலத்த எச்சரிப்புக்குள்ளானதுடன். கடந்த இரண்டு வருடகாலம் தாபரிப்புப் பணத்தைச் செலுத்தத் தவறியமையால் அத்தொகையில் ஒரு பகுதியாக ஐயாயிரம் ரூபாவை உடனடியாகச் செலுத்தவேண்டுமெனவும், மாதாந்தம் 250 ரூபா போதாது எனவும் வரும் ஜனவரி மாதத்திலிருந்து 500 ரூபா வீதம் மாதாந்தம் தாபரிப்புப் பணமாகச் செலுத்தப்பட வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.


# எமது புதிய வெளியீடுகள்

1. திருடாதே (Pyramid Master)
2. மனோகரா (Pyramid Master)
3. தண்ணீர் தண்ணீர் (Pyramid Master)
4. ஒரு இனிய உதயம் (R. V. V. Master)
5. மௌனம் கலைகிறது (R. V. V. Master)
6. மண்ணுக்குள் வைரம் (Pyramid Master)
7. மந்திரப் புன்னகை (Pyramid Master)

## குணம் வீடியோ சென்ரர்,

42, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 23665

(A-3264)


## உலகம் சுற்றும் கிருஷ்ணா கொழும்பு வந்தது

கொழும்பு, திங்கள்

உலகைச் சுற்றி வலம் வரும் 'கிருஷ்ணா' படகு நேற்று முன்தினம் ஞாயிறு காலை பத்து இராணுவப் பொறியியலாளர்களுடன் கொழும்பு வந்தது

முப்பத்தேழடி உயரமான பைபர் கிளாசினாலான இப்படகு கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் பம்பாயிலிருந்து உலகை வலம் வர புறப்பட்டது. இவ்வாறு ஒருபடகு உலகை வலம் வருவது இதுவே உலகில் முதல் தடவையாகும் (இ)

## தீவுப்பகுதி லயன்ஸ் கழக நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, திங்கள்

வேலணை ஊர்காவற்றுறை பிரிவுகளை உள்ளடக்கியதான தீவை மையமாக வைத்து கூடன் லயன்ஸ் கழகம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

தலைவராக திரு. த. தெட்சணாமூர்த்தியும், செயலாளராக திரு சு. சோமசேகரமும் பொருளாளராக திரு. கு. கணேசலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## இடமாற்றம்

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி உதவியரசாங்க அதிபர் க. துரைராஜா பதவி உயர்வுடன் கிளிநொச்சி மாவட்டத்துக்கு தை மாதம் 15ம் திகதியுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

இவரது இடமாற்றத்தினை நிறுத்தும்படி மக்கள் தென்மராட்சியில் இருக்கும் பல பொது ஸ்தாபனங்களும் மேலதிகாரிகளைக் கேட்டுள்ளன. (எ)

## மக்கள் பாதிப்பு

புங்குடுதீவு திங்

புங்குடுதீவு மத்தி - மேற்கு ஆகிய பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கட்டாக்காலி மாடுகளினால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமம் அடைந்து வருகின்றார்கள். இதனால் அவர்கள் வீட்டுத் தோட்டங்களோ நெற் செய்கையோ செய்யமுடியாத இக்கட்டான நிலையில் இருந்துவருகிறார்கள்.

## ஒளி விழா

யாழ்ப்பாணம், செவ்

மருதனாமடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன மாணவர் மன்றம் நடாத்தும் நத்தார் ஒளி விழா இன்று காலை மேற்படி கல்லூரி மண்டபத்தில் அதிபர் திரு சி. ஜெயரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஆறு மாதக் குழந்தைக்கு மூளைக் காய்ச்சல்

சாவகச்சேரி, திங்கள்

மறவன்புலோ பகுதியில் மூளைக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஆறு மாதக் குழந்தை ஒன்று பலியாகியது. (எ)

## வலைகள் திருட்டு

வேலணை, திங்கள்

வேலணை வெள்ளைக் கடற்கரையில் உள்ள கடற்றொழிலாளர்களது மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்கள் என்பன திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பும் இரு முஸ்லிம்களுக்குச் சொந்தமான பெறுமதி மிக்க வலைகளும் உபகரணங்களும் இக் கடலில் வைத்து திருடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## புத்திஜீவிகள் சங்கம்

வேலணை, திங்

தீவுப்பகுதியைச் சேர்ந்த எழுத்தாளர்கள், வாசகர்கள், கவிஞர்கள் மற்றும் துறைகளில் விசேட நிபுணத்துவம் பெற்றோர் ஒன்றிணைந்து புத்திஜீவிகள் சங்கமொன்றினை ஆரம்பிக்கவுள்ளனர்.

## இந்துமாமன்ற போட்டிகள்

கொழும்புத்துறை, திங்

கொழும்புத்துறை இந்துமாமன்றம் அடுத்தவரும் ஜனவரிமாதம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு இடையேயான பேச்சு, கட்டுரை, பண்ணிசை, ஓதல் போட்டிகளை நடாத்தவுள்ளது. இந்துமாமன்றத் தலைவர் ஆரா. செல்வராசா இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார். நான்கு பிரிவுகளாக இப்போட்டிகள் நடாத்தப்படுகின்றன. (எ)

## பஸ்தாக்குதல்: இளைஞர் காயம்

பருத்தித்துறை, தி.

மாரவிலவில் கடந்த வாரம் நடைபெற்ற பெற்றோல் பொம் தாக்குதலில் சேதமடைந்த கே. எஸ். பஸ்வண்டியில் கொழும்பிலிருந்து வந்துகொண்டிருந்த புலோலி தெற்கைச் சேர்ந்த ஆ. விக்கினராஜா [வயது 24] பலத்த காயங்களுக்குள்ளாகி மாரவெல வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தற்போது மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இச்சம்பவத்தில் இவர் முகத்திலும், கழுத்திலும் இரண்டுகைகளிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. (கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
23 12 86செவ்வாய்க்கிழமை

### ஹிந்தி எதிர்ப்பு: தமிழக சட்டசபையிலிருந்து

# அன்பழகன் உட்பட 10 தி.மு.க.வினரை நீக்கும் தீர்மானம் நிறைவேறியது

(சென்னை)

தமிழ்நாடு சட்டப்பேரவையின் தி.மு.க. குழுத்தலைவர் திரு. கே. அன்பழகன் உட்பட பத்து தி. மு. க. சட்டப் பேரவை உறுப்பினர்களை பதவி விலக்கும் தீர்மானம் ஒன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 17 வது பிரிவின் நகலை பொது இடம் ஒன்றில் தீவைத்து எரித்ததைத் தொடர்ந்து தி மு. க. உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

தமிழ்நாடுசட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. நெடுஞ்செழியன் இதற்கான தீர்மானத்தை தாக்கல் செய்தார்

தி மு. க. உறுப்பினர்களை பதவி விலக்கும் தீர்மானத்திற்கு ஆதரவாக 131 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் கிடைத்தன.

ஆளும் கட்சியான அண்ணா தி. மு. க. உறுப்பினர்கள இந்தியக் குடியரசு கட்சி உறுப்பினர்கள் நியமன உறுப்பினர் ஆகியோரே தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்வர்களாவார்.

தி. மு. க., இந்திய கம்யூனிஸ்கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ்ட் ஜனதா அகில இந்தியபார்வாட பளக், இந்தியயூனியன் முஸ்லிம்லீக், ஆகியவற்றின் உறுப்பினர்கள் எதிராக வக்களித்தனர்.

**பதவி நீக்கம் செய்யப்பட்டோர்**

தி மு க சட்டப்பேரவைக் குழுத்தலைவர், திரு கே. அன்பழகன், திரு. சு பாலன், திரு. ஏ. செல்வராசன், திரு. சி, பொன்னுரங்கம் திரு பருதிஇளம்பரிதி திரு மு: இராநாதன், திரு ஆர். சிவசாமி, திரு. எம் ஏபிரகாம், திரு பி. ஆறுமுகம், திரு. வி. கே. இராஜூ

**காங்கிரஸ் (ஐ) உறுப்பினர் வெளியேற்றம்**

''ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அரசியல் சட்டத்தின் நகலை எரித்ததன் மூலம் அரசியல் சாசனத்தை அவமதித்த குற்றத்திற்கு உறுப்பினர்கள் ஆளானார்கள் என்பதில் ஐயமில்லை. இதற்காக தொடர்ந்து சட்டப் பேரவையின் மீதிக் காலம்வரைக்கும் பதவி நீக்கச் செய்வது சரியல்ல, குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் அவர்களுக்குத் தண்டனை வழங்கினால் பேரவையின் கண்ணியத்துக்கும் கௌரவத்திற்கும் ஏற்றதாக இருக்கும்''

இவ்வாறு காங்கிரஸ் (ஐ) உறுப்பினர்கள் கூறி சபையிலிருந்து வெளியேறினர்.

அரசியல் சாசனத்தை அவமதித்ததன் மூலம் உறுப்பினர்கள் பதவி இழக்கும் சம்பவம், தமிழ்நாடு சட்டப்பேரவையின் வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(வா)

---

## வாகன அனுமதி பத்திர கடைசி திகதி பெப். 16

கொழும்பு திங்

1987-ம் ஆண்டுக்கான வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான கடைசித் திகதி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுளது

நாரஹென்பிட்டியாவில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள பிரதான காரியாலயத்தில் 1987-ம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கவென பல கிளை நிலயங்களும் திறக்கப்பட்டுள்ளன. (வா]

---

## முன்னாள் இந்திய உயர் ஸ்தானிகர் காலமானார்

(சென்னை)

இலங்கையின் முன்னாள் இந்திய உயர் ஸ்தானிகர் திரு வை. டி. கண்டேவியா புனேயில் நேற்று காலமானார்

நீண்டகாலமாக நோய் வாய்ப் பட்டிருந்த இவருக்கு இறக்கும்போது வயது 70.

(வா)

---

### தலவாக்கல

## கோவிலிலிருந்த அகதிகள் நுவரெலியாவுக்குமாற்றம்

நுவரேலியா நிருபர்

தலவாக்கல கதிரேசன் கோயிலில் தஞ்சமடைந்திருந்த 175 அகதிகள், கோயில் நித்தியகருமங்கள் பூஜைகளுக்கு இடைஞ்சலாக இருப்பதால் நுவரேலியாவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்

இங்குள்ள தோட்டங்களில் இந்த அகதிகளுக்கு வேலை வழங்குவதற்கு எடுத்த முயற்சிகள் எதுவும் பயன்தராமையால் இவர்களுக்கு வேலை வழங்கவேண்டுமெனக்கோரி தோட்டத் தொழிலாளர்கள் போராட்டமொன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

---

## அடவுவைத்தோர் நடத்திய மறியல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கி கிளைகளில் அடவு வைத்தோர் நேற்றும் மறியல் செய்ததால் ஊழியர்கள் திரும்பிச் சென்றனர்

சிலமக்கள் வங்கிக்கிளைகளில் பெண்கள் கூடுதலாக மறியல் இருந்தனர். சிலர் சுலோக அட்டைகளும் வைத்திருந்தனர்.

அடவு நகைகள் கிடைக்கும் வரை தொடர்ந்து மறியல் நடைபெறுமென்றும் மறியலில் பங்குபற்றியவர்கள் தெரிவித்தனர்.

சிலகிளைகளில் நண்பகல் வரை மறியல் நீடித்தது.

---

## '4-ஏ' பெற்ற மாணவனுக்கு பாராட்டு

கோப்பாய், திங்:

இவ்வருடம் நடைபெற்று அண்மையில் முடிவுகள் வெளியாகிய கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் நாலு ஏ'களைப் பெற்று அகில இலங்கையிலும் மிகத் திறமையாகச் சித்தியடைந்த யூனியன் கல்லூரி மாணவன் செல்வன் நா. சந்தனுக்கு பழைய மாணவர்கள் தங்கப் பதக்கப் பரிசளித்துக் கௌரவித்தனர்.

கடந்த வாரம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. க. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பழைய மாணவர் சங்கத் தலைவரும், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவருமான திரு ஆ ந இராசேந்திரன் சுகந்தனுக்கு தங்கப் பதக்கம் சூட்டினார்.

---

## நிவாரணத்தை நீடிக்க கோரிக்கை

புலோலி, திங்கள்

கடந்த மாதம் 11ம், 12ம் திகதிகளில் தொண்டமானாறு, வல்வெட்டித்துறை பருத்தித்துறை பாதுகாப்புப் படை முகாம்களிலிருந்து வெளியே வர எத்தனித்து வான், கடல், தரை மார்க்கமாக அரசபடையினர் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து வீடு வாசல்களையும், உடைமைகளையும் விட்டு 3000க்கும் அதிகமான மக்கள் வெளியேறி அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். இதில் தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறையைச் சேர்ந்த ஆயிரம் பேருக்கு அரசு இருவாரங்களுக்குப் போதுமான உணவுப் பொருட்களை அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் மூலமாக அண்மையில் நிவாரணமாக வழங்கியது தெரிந்ததே.

ஏனையோருக்கும் நிவாரணம் வழங்கும்படியும், வழங்கப்பட்டவர்கள் உட்பட அகதிகளாக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் அவர்கள் சொந்த வீடுகளுக்குப் போகும்வரை இந்த நிவாரணத்தை நீடிக்க வேண்டும் என்றும் சம்பந்தப்பட்டவர்கள் அரசை வற்புறுத்திவருவதாகக் கூறப்படுகின்றது.

---

## மரண அறிவித்தல்

### கந்தசாமி சரஸ்வதி

கந்தசாமி சரஸ்வதி காலமானார். இவர் காலம் சென்ற N கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், நடராசா, நாகராசா, சண்முகவடிவேல் தேவராசா, சாவித்திரிதேவி, சகுந்தலாதேவி, கமலாதேவி, இந்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் S நடராசா, A தியாகராசா, N. சுந்தரலிங்கம், S. சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மாமியாரும் விஷாலட்சுமி இரத்தினம்பிகை யசவதி ஆகியோரின அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 23-12-86 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் கொத்தியாலடி மயானத்தில நடைபெறும் உற்றார், உறவினர் யாவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
க, சண்முகவடிவேல்.
(C 6494)

---

### துரைச்சாமி சிவசாமி பத்மராஜன்



யாழ்ப்பாணம் 5ம் குறுக்கு வீதியைச் சேர்ந்த சிவசாமி பத்மராஜன் [பிரான்ஸ்], சென்னை - தமிழ் நாட்டில் காலமானார். இவர் நாகபூசணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்த்தகர் கா துரைசாமியின் அருமைப் பேரனும் சிவசாமி புஷ்பவதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், வரதராஜன் [பிரான்ஸ்] திருமதி மஞ்சுளாதேவி - விமலராஜா (பிரான்ஸ்), திருமதி யசோதாதேவி-ரஞ்சன் [பிரான்ஸ்], திருமதி கீதாதேவி-ராசரஞ்சிதம் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ரேசான், தமயந்தி, சஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி உமாதேவி வரதராஜனின் அருமை மைத்துனரும், சாவகச்சேரி செல்வத்துரை சிவக்கொழுந்து தம்பதிகளின் அருமை மருமகனும், சிவராசா, முத்துராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மைத்துனரும், வட்டுக்கோட்டை Dr கந்தையா காசிப்பிள்ளையினதும் திருமதி மாணிக்கம் வீரபத்திரர் அவர்களின் அருமைப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-12-86வியாழக்கிழமை தமிழ்நாடு-சென்னையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

C 6492
தகவல்: K. D. சிவசாமி;

---

### புதிய ஆண்டுமுதல்

## யாழ். மாவட்டத்தில் மேலும் பல கொத்தணி அமைப்புகள்!

வல்வெட்டித்துறை, திங்கள்

கல்வி அமைச்சின் வெள்ளை அறிக்கையின்படி 1987 ம் ஆண்டு தொடக்கம் யாழ். மாவட்டத்தில் மேலும் பல கொத்தணி அமைப்புக்களை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்பரகாரம் உடுப்பிட்டி வட்டாரம் நான்கு கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கொத்தணிக்கும், பிரதான பாடசாலையின் அதிபர் கொத்தணி அதிபராகக் கடமையாற்றுவார்.

உடுப்பிட்டி வட்டாரம் சிதம்பராக் கல்லூரியை தலைமைப் பாடசாலையாகக் கொண்டு வல்வெட்டித்துறை வலயமாகவும் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியைத் தலைமைப் பாடசாலையாகக் கொண்டு உடுப்பிட்டி வலயமாகவும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தை தலைமைப் பாடசாலையாகக் கொண்டு நெல்லியடி வலயமாகவும் விக்னேஸ்வரக் கல்லூரியை தலைமைப் பாடசாலையாகக் கொண்டு கரவெட்டி வலயமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வலயக் கொத்தணி அதிபராக சிதம்பராக் கல்லூரி அதிபர் திரு. கோ. செல்வவிநாயகம் அவர்கள் கடமையாற்றுவார் இக் கொத்தணி அமைப்பின் கீழ் வல்வை சிதம்பராக்கல்லூரி வல்வை மகளிர் மகா வித்தியாலயம், தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், வல்வை சிவகுரு வித்தியாலயம் வல்வெட்டி இந்து தமிழ்கலவன் பாடசாலை, வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம், வல்வை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, வல்வை அமெரிக்கன்மிஷன்பாடசாலை, பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை கெருடாவில் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை ஆகிய பத்துப் பாடசாலைகள் இணைக்கப்பட்டுள்ளன.

---

### அநுராதபுரத்தில் மரணச்சடங்கு

வவனியா, திங்கள்

கடந்த புதன் இரவு முருங்கனில் வைத்து வீட்டுக்கு வெளியில் கூப்பிடப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்ட இரு முஸ்லிம் வர்த்தகர்களுடைய மரணச் சடங்குகளும் அநுராதபுரத்தில் நடைபெற்றன

மேற்படி சூட்டுக்கு இறந்த இருவரும் சகோதரர்களாவர்.

இவர்களின் மரணத்துக்கு யார்பொறுப்பாளிகள் என்பது இதுவரை தெரியவில்லை

இவர்களுக்கு கொழும்பில் [illegible] தெரிவிக்கப்படுகிறது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49 Telegrame :Eelanadu Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org